விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 20 புதன்கிழமை (04.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 075

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# மக்களின் சேவகனான எனக்கு தமிழர் பிரச்சினைகள் தெரியும்

## தீர்வு வழங்குவேன் என ஜனாதிபதி யாழில் உறுதி



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்னவென்று மக்கள் சேவகனான எனக்குத் தெரியும். அப்பிரச்சினைகளிற்கான முடிவு நோக்கியே நாம் பயணிக்கத் திட்டமிட்டுள்ளோம். இலங்கையில் இனங்களுக்கிடையிலான பல பிரச்சினைகள் மிக நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கின்றது. அவ்வாறான பிரச்சினைகள் தொடர்பாக நாங்கள் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புடனும் மனம்விட்டுப் பேசுவதன் ஊடாகவே தீர்வினை பெற முடியும். அது ஜனநாயகத்தின் ஒரு முக்கிய அங்கமாகும் என ஜனாதிபதி மைத்திபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் யாழ்.மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வடமாகாண ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். 04ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளி கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

முன்னாள் போராளி ஒருவரும் அவரது 8 வயது மகளும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள தமது பெற்றோரை பார்க்க பிரான்ஸில் இருந்து வந்த ஜெயகணேஸ் பகீரதி என்பவரும் அவரது 8 வயது மகளான ஜெயகணேஸ் பகலவி ஆகியோருமே 04ஆம் பக்கம் பார்க்க....

## காணாமல் போனோர் கவனயீர்ப்பு இன்று

(கொழும்பு)

காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து இன்று புதன்கிழமை கவனயீர்ப்பு போராட்டமொன்றை யாழ். அரச செயலகம் முன்பாக நடத்தவுள்ளனர்.

அத்துடன் ஜனாதிபதியிடம் மனு ஒன்றையும் தாம் கையளிக்கவுள்ளனர் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். 04ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த கட்டிய மாளிகையை பார்க்கப் பிடிக்காத மைத்திரி

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையினை நேரில் சென்று பார்வையிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு இதனைப் பார்க்க பிடிக்கவில்லை எனக் கூறி அங்கிருந்து உடனடியாகவே வெளியேறியுள்ளார்.

யாழிற்கு நேற்றைய தினம் வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால 04ஆம் பக்கம் பார்க்க....

## உள் நாட்டு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் - ஐ.நா

(கொழும்பு)

சர்வதேச நியதிகளுக்கு அமைய இடம்பெறும் உள்ளக விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்கள் தொடர்பான உதவி பொதுச் செயலாளர் ஜெப்ரி பெல்ட்மன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நேற்று பிற்பகல் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் 04ஆம் பக்கம் பார்க்க....

## ஜேர்மன் குழு இலங்கை வருகை

(கொழும்பு)

ஜேர்மன் வெளிவிவகார அமைச்சின் ஆசிய பசிபிக் பிராந்திய இயக்குநர் பீட்டர் புறுகேல் நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார்.

அதற்கமைய அவர்களின் பயணம் எதிர்வரும் 9 ஆம் திகதி அமையும் என்றும் இலங்கை வரும் குழு மார்ச் 13 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் என்றும் கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகம் அறிவித்துள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## பில் கேட்ஸ் முதலிடம்



(நியூயோர்க்)

உலகின் மிகப்பெரும் பணக்காரர் பட்டியலில் பில்கேட்ஸ் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார். போப்ஸ் இதழ் வருடாந்தம் வெளியிடும் உலகின் மிகப்பெரும் பணக்காரர்கள் 04ஆம் பக்கம் பார்க்க....

## தேசியக் கொடியை கீழிறக்கி சிங்களக் கொடி ஏற்ற முயற்சி

### கண்டி தலதா மாளிகையில் பதற்றம்



(கண்டி)

கண்டி தலதா மாளிகையின் வளாகத்தில் நிகழ்வுகள் நடைபெறும் இடத்திலிருந்த நாட்டின் தேசிய கொடியை பலாத்காரமாக அகற்றிவிட்டு சிங்களக்கொடி ஏற்றியமை குறித்து கண்டி பொலிஸாருக்கு புகார் 04ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீதான அறிக்கை மீளவும் தாமதிக்கக் கூடாது

### ஜெனிவாவில் பிரிட்டன் வலியுறுத்து

(கொழும்பு)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தால் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை வெளியிடுவதை செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னரும் தாமதிக்கக் கூடாது என்று பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகிய ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 28வது அமர்வில் உரையாற்றிய பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் 04ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறாது ஒளிர்க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## ஊழியர் தேவை

நெல்லியடியில் இயங்கும் பலசரக்கு மொத்த விற்பனை நிலையத்துக்கு சிப்பந்தி மற்றும் சீட்டை எழுதுனர் தேவை.

**(வடமராட்சியில் வசிக்கும் ஆண்கள் மட்டும்)**

**தொடர்புக்கு:-0777422604**

(சி-255)

## நிரந்தர தொழில்வாய்ப்பு

உங்கள் எதிர்கால சேமிப்பிற்கு நிரந்தர வேலை ஒன்றினை பெற உடன் தொடர்பு கொள்ளுங்கள். கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளில் ஜாம், ரொபி, பிஸ்கட், கோடியல், கிளவுஸ், நூடில்ஸ் போன்றவற்றில் உற்பத்தி, லேபல், பொதியிடல் பிரிவுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000-38000 உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். வருகை அன்றே வேலை.


**தொடர்புக்கு:-0778176234**

(சி-258)

## Dr.ஆறுமுகம் கேதீஸ்வரன்

அவர்களின் சேவையைக் கௌரவிக்கும்

# பாராட்டு விழா



**காலம்:-2015.03.05 வியாழக்கிழமை பி.ப 2.30 மணி**

**இடம்:-நெல்லியடி மத்திய கல்லூரி-கலையரங்கு**

வட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அவர்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக ஆற்றிய சேவையைக் கௌரவிக்குமுகமான பாராட்டு விழா.

தலைமை திரு.செ.சேதுராஜா (அதிபர், நெல்லியடி மத்திய கல்லூரி)

ஆசியுரைகள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (குரு முதல்வர், நல்லை ஆதீனம்), அருட்தந்தை டேமியன் அடிகளார்.

**வாழ்த்துரைகள்**

வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம்
(கௌரவ.சுகாதார அமைச்சர், வட மாகாணம்)
திரு.இ.ரவீந்திரன்
(செயலாளர், வட மாகாண சுகாதார அமைச்சு)
திரு.T.திருவாகரன்
(வட.மாகாண முதலமைச்சரின் செயலாளர்)
கலாநிதி த.பாலகுமார்
(பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ்ப்பாணம்)
திரு.சி.சத்தியசீலன்
(செயலாளர், வட மாகாணக் கல்வி அமைச்சு)
வைத்திய கலாநிதி V.முரளி
(நிபுணத்துவ ஆலோசகர், சமூக நலத்துறை)
திரு E.தேவநேசன் (பி.சு.சே.பணிப்பாளர், யாழ்ப்பாணம்)
திரு.இ.வரதீஸ்வரன் (செயலாளர், மீன்பிடி அமைச்சு, வட மாகாணம்)
பேராசிரியர் கு.மிகுந்தன் (பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம்)

வைத்திய கலாநிதி நந்தகுமார் (பிரதிப் பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)
பேராசிரியர் M.நடராஜசுந்தரம் (ஓய்வுநிலைப் பேராசிரியர்)
திரு.சி.சிவசிறி (பிரதேச செயலர், கரவெட்டி)
திரு.த.ஜெயசீலன் (பிரதேச செயலர், பருத்தித்துறை)
திரு.ந.திருலிங்கநாதன் (பிரதேச செயலர், மருதங்கேணி)
வைத்திய கலாநிதி D.விநோதன் (பி.சு.சே.பணிப்பாளர், கிளிநொச்சி)
திரு.சி.நந்தகுமார் (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
வைத்திய கலாநிதி S.சுதோக்குமார் (சுகாதார வைத்திய அதிகாரி, கரவெட்டி)
வைத்தி கலாநிதி வே.ஜெயராஜ் (மருத்துவ அத்தியட்சகர், பரு. ஆதார வைத்தியசாலை)

*தங்களை அன்புடன் அழைக்கின்றோம்*

ஏற்பாட்டுக்குழு
நோயாளர் நலன்புரிச் சங்கம்
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

(சி-270)

## மரண அறிவித்தல்

### திருமதி கதிரவேலு தங்கம்மா



"பூம்புகார்" அல்வாய் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு தங்கம்மா அவர்கள் நேற்று 03.03.2015 அன்று காலமானார்.

அன்னார் சின்னப்பு சின்னாச்சியின் அன்பு மகளும், முருகேசு இராசம் அவர்களின் அன்பு மருமகளும், "பூம்புகார் கதிரவேலு" அவர்களின் அன்பு மனைவியும், தவயோகநாதன் (யோகன்) (பிரதேச சபை உறுப்பினர் பருத்தித்துறை) வளர்மதி, இரத்தினராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், வே.இரத்தினராசா (ஓய்வுநிலை நிர்வாக அதிகாரி, மாவட்ட செயலகம், முல்லைத்தீவு), த.ரேணுகா ஆகியோரின் அன்பு மாமியாரும், கயல்விழி (லண்டன்), முரளிதரன் (நியூசிலாந்து), கீர்த்திகா, றாதிகா (நியூஸ்லாந்து), ரமணன், றெஜீனா, றெஜிந்தன், றெக்சன், றெனோசன், நித்திக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரஜீந், அனுஸ்கா (லண்டன்), சுபிக்சன், கிருஸ்ணிகா ஆகியோரின் அன்புப் பீட்டியும் மற்றும் காலஞ்சென்றவர்களான பழனிப்பிள்ளை, செல்லம்மா, இராசம்மா, கணேசன் (புரட்சி), வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மார்க்கண்டு, பவளம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.03.2015) புதன்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"பூம்புகார்"
அல்வாய் வடக்கு.

தகவல்:
க.தவயோகநாதன் (மகன்)
(பிரதேச சபை உறுப்பினர்-பருத்தித்துறை)


(சி-268)

## மாற்றத்தை எமது மக்களுக்கானதாக மாற்றுவோம்...
















# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ்.மாவட்டத்தில் 01.03.2005 தொடக்கம் கடந்த 10 வருடங்களாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய**



**வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன்**

(பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்-யாழ்.மாவட்டம்)

அவர்கள் பதவி உயர்வு பெற்று வடமாகாண

**பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக செல்லும் இவ்வேளையில்**

யாழ்.மாவட்டத்தின் சுகாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை பல வழிகளிலும் முன்னுதாரணமாக நின்று செயற்படுத்தி யாழ்.மாவட்டத்தின் சுகாதார சேவைகளை முன்னேற்றி அளப்பரிய சேவைகள் ஆற்றியமையையிட்டு அவரது சேவைகளை பாராட்டி வாழ்த்துவதுடன்

மேலும் பல பதவி உயர்வுகளை பெற்று வட மாகாண மக்களுக்கு சிறந்த சுகாதார சேவைகளை ஆற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

(சி-262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை செய்யப்பட்ட வலைகளை பாவித்த 24 மீனவர்கள் கைது

(கொழும்பு)

தடைசெய்யப்பட்டுள்ள சுருக்கு வலைகளை பாவித்து மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 24 மீன வர்கள் கற்பிட்டி வடக்குப் பகுதியில் சிலாவத்துறை கடல் எல்லையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கற்பிட்டி கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் உதவி கடற்றொழில் பணிப்பாளர் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மீனவர்களிடமிருந்து இரண்டு சுருக்கு வலைகள் மற்றும் ஐந்து படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட சுருக்குவலைகள் மற்றும் படகுகளுடன் இந்த மீனவர்கள், புத்தளம் உதவி கடற்றொழில் பணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (இ-5)

# புலனாய்வுப் பிரிவிற்கு பணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)

அரச புலனாய்வுப் பிரிவின் புதிய பணிப்பாளராக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டி.ஜி.நிலந்த ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அமைதி, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் ஆலோசனையின் பேரிலேயே பொலிஸ்மா அதிபர் இந்நியமனத்தை வழங்கியுள்ளார்.

டி.ஜி.நிலந்த ஜயவர்த்தன இதற்கு முன்னர் காங்கேசன் துறை வலயத்திற்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரியாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## தேவை

துறைமுகம்/ விமான நிலையம் சேவைக்கு கல்வித்தகைமை உள்ள/ அற்ற பயிற்சியுடைய/ பயிற்சியற்ற 18-55 வயதிற்கு இடைப்பட்டவர்கள் உடனடியாக தேவை. (உணவு, தங்குமிடத்துடன் உயர்ந்த சம்பளம்) தொடர்புகளுக்கு:- 077 2926 934 (சி-9634)


## கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்

### வருடாந்த மதியபோசனமும் ஒன்றுகூடலும்

கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கத்தின் மதிய போசனமும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் எதிர்வரும் 2015.03.05 அன்று நண்பகல் 12 மணிக்கு கனகபுரம் நண்பர்கள் விடுதியில் நடைபெறவிருப்பதால் சகல உறுப்பினர்களையும் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி-252) -செயலாளர்-

# மரண அறிவித்தல்

## நாகேசு நவரத்தினம்

### (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)



வட்டு. வடக்கு சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு நவரத்தினம் நேற்று ( 03.03.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேசு சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை விசாலாட்சி, தம்பதிகளின் மருமகனும், உமாதேவியின் அன்புக்கணவனும், தனரட்ணம் (முகுந்தன்), இராஜினி (நீலா), சண்முகரட்ணம் (சேந்தன் -கனடா), சுபாஜினி (சுபா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சில்வானா (சுவிஸ்), கிருஸ்ணமூர்த்தி (கட்டட ஒப்பந்தகாரர்), தட்சாயினி (கனடா), கிருபாகரன் (Hutch Telecom, பிராந்திய தொழில்நுட்ப உத்தியோகத்தர் , வடமாகாணம்) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், மனுவேல், மயூரன், ஜெனனி, சுவேந்தா, சிவதர்சினி, சிவாஜினி, சிவகஜன், துஷான், தருன் ஆகியோரின் அன்பு பேரனும், நாகரத்தினம், புஸ்பராஜா, கலாவதி, பரமவதி, விமலவதி ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா (ஆசிரியர்), ஸ்ரீ புஸ்பகாந்தன் மற்றும் பரமேஸ்வரன், சரவணபவா, சிவஞானம் புதுமைலோலன், இராஜேஸ்வரி காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி (கிளிநொச்சி), கமலாதேவி மற்றும் பத்மாதேவி, தவமணிதேவி, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2015) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**தொல்புரம் கிழக்கு,**
**சுழிபுரம்.**

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**0783878883**

(9661)

## உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து)
## உடுப்பிட்டி

### 31.07.2014 இல் உள்ளவாறான கணக்கு மீதியினை உறுதிப்படுத்தல்

எமது சங்கத்தின் 2013/ 2014 ஆம் ஆண்டுக்கான எண்பார்வை நடைபெற்றுக் கொண்டு இருப்பதால் கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தமது மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ள அக்காலத்துக்குரிய கணக்குப் புத்தகங்களுடன் 09.03.2015-13.03.2015 ஆம் திகதி வரை வங்கிக்கு சமுகமளித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் கணக்கு மீதிகளினை உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் மீதிகள் சங்கப் பேரேடுகளின் படி சரியானதென உறுதிப்படுத்தப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொது முகாமையாளர்
04.03.2015

(சி-253)

## UNIVERSITY OF JAFFNA

*HUMAN RESOURCE ADVANCEMENT UNIT*
*DIPLOMA IN ENGLISH FOR OFFICERS*

**Repeat Examination 2013**

**Examinations in 1st, 2nd, 3rd, 4th Semesters**

Applications are invited for the above examinations from the students of the Diploma in English for the Officer's up to 12.03.2015.

Applications forms could be obtained from the Human Resource Advancement Unit, University of Jaffna and perfected applications should be handed over to the same office. Repeat candidates should pay Rs.50/= for a course unit at the Peoples Bank, University of Jaffna Branch or shroff office, University of Jaffna. The receipts should be attached with the Examination Application Forms.

Registrar
University of Jaffna.

(சி-254)

# இராசி பலன்

04.03.2015
மாசி 20, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 10.09 மணிவரை
ஆயிலியம் காலை 6.49 மணிவரை
இராகுகாலம் 12.26-1.56 மணிவரை
சுபநேரம் 4.56-6.26 மணிவரை
மாசி மகம், நரேசரபிஷேகம்

வளவன்

**மேடம்:** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி முக்கிய முடிபுகள் எடுப்பீர்கள், வழிபாடு திருப்திதரும்.

**இடபம்:** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** நல்லவர்களின் தொடர்புகள் நன்மைதரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்:** உங்களின் புதிய கருத்துக்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், குடும்பச்சுமை கூடும், நண்பர்கள் ஒளிவுமறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி:** சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்களும் ஏற்படலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சயனசுகக் குறைவான நாள்.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தேவைகள் பூர்த்தியாகும், பயணங்களால் பலனுண்டு, பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள்.

**தனுசு:** அரை குறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், உதாசினப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.

**மகரம்:** பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, குடும்பத்தில் சிறு சிறு முரண்பாடுகள் தோன்றும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**மீனம்:** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புகள் விலகும், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் கங்காதரனின் இறுதிக் கிரியை இன்று



(யாழ்ப்பாணம்)

புகழ் பூத்த புல்லாங்குழல் இசைமேதை வைத்திய கலாநிதி தியாகராஜா கங்காதரன் நேற்று முன்தினம் காலமானார்.

போர்க்காலச் சூழலில் வன்னிப் பகுதி மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கிப் பெரும்பணியாற்றிய டாக்டர் கங்காதரன் யாழ்ப்பாணத்திலும் தனியார் வைத்திய சாலையை நிறுவி மருத்துவப் பணியாற்றினார்.

புல்லாங்குழல் வாசிப்பதில் வல்லவராக விளங்கிய டாக்டர் கங்காதரன் பல இசைக் கசசேரிகளையும் நடத்தியவர்.

இவரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் (ந)

## முன்னாள்...

பிரான்ஸிற்கு திரும்புகையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர.

பகீரதி என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர். கடந்த 2005 ஆம ஆண்டு பிரான்ஸில் திருமணம் முடித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை கைது செய்யப்பட்ட பகிரதியும் மகள் பகலவியும் தற்போது பயங்கரவாத தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் கைது செய்யப்பட்ட இருவரும் பிரான்ஸ் குடியுரிமை பெற்றவர்கள என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தேசியக்...

அளிக்கப்பட்டுள்ளது. இது பற்றி தெரியவருவதாவது,

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில உள்ள மகுள் மதுவயில் ஏற்றப்பட்டு இருந்த இலங்கையின் தேசியக் கொடியை கீழிறக்கி அங்கு (சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவ அடையாளங்களை நீக்கிய) சிங்கள கொடி என அழைக்கப்படும் ஒரு கொடியை பறக்கவிட ஒரு கும்பல் முயற்சி செய்ததால் அங்கு பதற்ற நிலை தோன்றியுள்ளது.

நேற்று முன்தினம் தலதாமாளிகையில் பத்தர முல்ல சுவர்ணசங்க நிதியம் என்ற அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விலேயே இந்த சம்பவம் நடைபெற்றது. (செ-11)

## பில்கேட்ஸ்...

பட்டியலிலேயே இவர் முதலிடத்தில் உள்ளார்.

உலகின் மிகப்பெரும் பணக்காரர் பட்டிய்லை போப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில், பேஸ்புக்ஸ் நிறுவுனர் மாக் ஜுக்கர்பேக் முதல் 20 இடத்துக்குள் வந்துள்ளார்.

அத்துடன், கூடைப்பந்தாட்ட நட்சத்திர விளையாட்டு வீரர் மைக்கல் ஜோடன் இந்த பட்டியலில் முதல தடவையாக நுழைந்துள்ளார்.

16 ஆவது தடவையாக இந்த பட்டியலில் முதல் இடத்தை பிடித்துள்ள, மைக்றோ சொப்ட் நிறுவனத்தின் பங்கு நிறுவனரான பில்கேட்ஸின் வருமானம் 79.5 பில்லியன் அமெரிக்க டொலர் ஆகும.

மெக்ஸிக்கோவின் தொலைதொடர்பு முன்னிலை தொழிலதிபர் கார்லோஸ் ஸ்லிம் ஹெலு 77.1 பில்லியன் வருமானத்தை பெறுவதுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார்.

72.7 பில்லியன் டொலர் வருமானத்தை பெறும்பேக்ஸ்யர்ஹதவே கூட்டுத்தாபன தலைவர்வறன் புவே மூன்றாம் இடத்தில உள்ளார். இந்திரெக்ஸ் நிறுவன ஸ்தாபகர் அமன் ஸியோ ஒட்டகா நான்காம் இடத்தை பிடித்துள்ளார் (64.5 பில்லியன் டொலர்). ஏறக்கின் கோப்பறேஸன் தலை வர் லறி எலிஸன் ஐந்தாவது இடத் திலுள்ளார்.

போப்ஸ் சஞ்சிகை கடந்த வருடம் 1,645 பில்லியனர்களை இனங்கண்டதுடன் இவ்வருடம் 1,826 பில்லியனர்களை பட்டியலிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மகிந்த கட்...

சிறிசேன யாழ்.மாவட்ட செயலகத்தில் வடமாகாண ஒருங்கிணைப்பு கூட்டத்தினை தலைமையேற்று நடத்திய பின்னர் வலி.வடக்கில் அமைந் துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த வின் மாளிகைக்கு முன்னறி வித்தலின்றி திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொணடார்.

இதன் போது அங்கு நின்ற கடற்படையினர் ஜனாதிபதியினை கண்டதும் திக்கு முக்காடியதுடன், செய்வதறியாமல் திகைத்தும் போயினர். மாளிகையின் முகப்பு வாயிலை அடைந்த ஜனாதிபதி மாளிகையை பார்த்தவுடன் சினமடைந்து மாளிகையை பார்ப்பதற்க ஆர்வம் காட்டாமல் உடனடியாகவே வெளியேறினார்.

மாளிகை தொடர்பில் விளக்கமளிக்க முற்பட்ட கடற்படை சிப்பாய் ஒருவரினையும் இதன் போது கடிந்து கொண்டார். மேலும் மாளிகை தொடர்பிலான தகவல்களையும் ஒளிப்படங்களினையும் திரட்டி வருமாறு தனது உதவியாளருக்கு உத்தரவிட்டிருந்தார.

இம்மாளிகை அமைந்துள்ள காணி முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் இந்து சமய அமைப்பை சேர்ந்த கௌரி என்பவருக்கும் சொந்தமானதோடு இரண்டாயிரம் மில்லியன் ரூபாய் செலவிலும் இம் மாளிகைகட்டப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இத்திடீர் விஜயத்தின் போது வடமாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் எம்.ஏ சுமநதிரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

இதேவேளை குறித்த மாளிகையினை பராமரிப்பதற்கு பல நூற்றுகணக்கான கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. (செ-4)

## மக்களின்...

மேற்படி ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தொடர்ந்தும் அவர் தனது உரையில் குறிப்பிட்டதாவது, தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த மக்கள் எமக்கு வாக்களித்து இந்த ஆட்சியை உருவாக்கியிருக்கின்றார்கள்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் பல புதிய மாற்றங்களை மக்கள் நேரடியாக பார்த்துக் கொண்டிருக் கின்றார்கள். தொடர்ந்தும் பார்ப்பார்கள். அதேபோன்று மக்களை பாதுகாக்க வேண்டிய்து எமது கடமையாகும்.

இங்கே பேசியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கூறியிருந்தார். அவர்களுக்கும எமக்குமிடையில் எவ்விதமான ஒப்பந்தங்களும்செய்யப்படவில்லை. அது உண்மையான விடயமாகும்.

அதனை மக்கள் இப்போது உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள். எமக்கிடை யில் மனரீதியாகவும், மனிதத்துவத்தின் அடிப்படையிலும்,

உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மக்களை பாதுகாப்பதும், மக்களை நேசிப்பதும் எங்கள் கடமையாகும். அந்த வகையில் தேசிய ஒற்றுமைக்காக பாடுபடுகின்றோம்.

இது மிகவும் அவசியமான ஒன்றாகும். மேலும் இங்கே நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசிய அனைத்து விடயங்களையும் நானஉற்சாகததுடன் கேட்டிருக்கின்றேன். அதே உற்சாகத்துடன் அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் நான் முயற்சி எடுப்பேன். நாட்டில் உருவாகியிருக்கும் சமாதானமான சூழலை பயன்படுத்தி மக்கள் பாதுகாப்பாகவும் பயம் இல்லாமலும் வாழவேண்டும்.

மேலும் ஆட்கடத்தல், பெண்கள் மீதான வன்முறைகளுக்கு தீர்வு காணவேண்டும். நாம் நாட்டிலுள்ள அனைதது மக்களையும், சமமானவர்களாகவே பார்க்கிறோம். ஆனாலும் இலங்கையின் வடகிழக்கு மாகாணங்கள் போரினால் பாதிக்கப்பட்ட மாகாணங்களாகும். எனவே இந்த மாகாணங்களுக்கு விசேட முக்கியத் துவம் வழங்க வேண்டியிருக்கின்றது.

எமக்கிடையில் பல பிரச்சினைகள், கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் அவை குறித்து நாங்கள் உட்கார்ந்து. புரிந்துணர்வுடனும், விட்டுக் கொடுபபுடனும் மனம்விட்டுப் பேசுவதன் ஊடாகவே அவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும். அது ஜனநாயகத்தின் மிக முக்கியமான அங்கமுமாகும். மேலும் மாகாண சபைகள், நாடாளுமன்றம் போன்றன இந்தவிடயத்தில் அதிக முக்கியத்துவத்தினைப் பெற்றிருக்கின்றன.

எங்களுடைய ஆட்சியில் மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினைகளுக்கு அதிகளவுமுக்கியத்துவம கொடுக்கப்பட்டிருக்கின்றது. யுத்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சினால் மக்களுடைய பல காணிகள் எடுக்கப் பட்டிருககின்றன. அவற்றை மீளவும் மக்களிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். அதற்கான பொறுப்பை மீள்குடியேற்ற அமைச்சர், டி.எம்.சுவாமிநாதனிடம் ஒப்படைத்திருக்கின்றோம்.

அவர் தனது கடமையினை மிகவும் சிறப்பாக மேற்கொண்டிருக்கின்றார். மேலும் யுத்த காலத்தில வடமாகாணத்தில் மட்டுமல்லாமல் தெற் கிலும் பல காணிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக அலரி மாளிகையை சுற்றியுள்ள பகுதியில் பெறுமதியான பல காணிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

எனவே அவற்றையும் நாங்கள விடுவித்து உரியவர்களிடம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

வடமாகாண கடற்றொழிலாளரகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து நாம் நன்றாக அறிந்திருக்கின்றோம். அது மிகப்பெரிய பிரச்சினை என்பதும் எமக்கு தெரியும். குறிப்பாக இந்திய இழுவை படகுகள் உங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து செய்யும் அட்டூழியங்கள் தொடர்பாக நாம் இந்தியா சென்றிருந்த சமயம் இந்திய பிரதமருடனும் பேசியிருக்கின்றோம்.

நாம் கூறிய விடயங்களை இந்திய பிரதமர் ஒத்துக்கொண்டுள்ளதுடன், அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித் திருக்கின்றார். எனவே எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சினைகளை அதிகாரிகள் மட்டத்திலேயே தீர்த்துக் கொள்ளக் கூடிய வகையிலான செயன்முறை நடைமுறைக்கு வரும் என நம்புகின்றோம்.

இலங்கையில் 100ற்கு 6 வீதமானவர்கள் வேலைவாய்ப்பற்றிருக்கினறார்கள். குறிப்பாகப்பட்டதாரிகள்வேலையற்றவர்களாக இருக் கின்றார்கள். எனவே அந்த விட யத்தை வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இங்கே சுட்டிக் காட்டியிருந்தார். அவருடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அது மட்டுமல்லாமல் அவ்வாறு வேலைவாய்ப்பற்று,

இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்கும் நாம்நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம்.

வடமாகாண விவசாயிகள் இலங்கையில் உள்ள மற்றைய மாகாணங்களின் விவசாயிகளுக்கு முனமாதிரிகள், கடுமையான உழைப்பாளிகள் என்பதுநீண்டகால உண்மையாகும். அதனை நான் 5 வருடங்கள் விவசாய அமைச்சராக இருந்த காலப்பகுதியில் உணர்ந்திருக்கின்றேன. எனவேவிவசாயிகளுடைய பிரச்சினைகள் தொடர்பாகவும் இங்கே, நாடாளுமன்ற உறுப்பினரகள், வடமாகாண முதலமைச்சர் ஆகியோர் சுட்டிக்காட்டியிருந்தார்கள். எனவே நாம் அது தொடர்பிலும் நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்போம்.

வடமாகாணத்தில் 80ஆயிரம் விதவைகள் இருப்பதாக எனக்கு அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. எனவே அவர்களுக்கு உதவுவதற்கான விசேட செயற்றிட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துவோம். இதேபோன்று போரினால்வடகிழக்கில் மட்டுமல்லாமல் தெற்கிலும் பலர் விதவையாகி யிருககின்றாரகள். எனவே அவர்களுக்கும் நாங்கள் உதவுவோம்.

இதறகான பொறுப்பை நாங்கள மகளிர் விவகார பிரதி அமைச்சரிடம் ஒப்படைத் திருக் கின்றோம் எனவே அவர் அதனை செய்வார். இதேவேளை எங்களுடைய 100நாள் செயற்றிட்டம் தொடர்பாக நிறைவேற்றுக் குழு வாரம் தோறும் கலந்துபேசிக் கொண்டிருக் கின்றது. அதன்மூலம் எமக்கு பல பலாபலன்கள் கிடைக்கும். எதிர் வரும் நாட்களில் எமது மத்திய அமைச்சர்களை இங்கே அனுப்பி மாகாணசபையுடன் இணைந்து இந்தப் பகுதியை முன்னேற்றுவதறகானசெயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறு நான் அமைச்சர்களுக்குப் பணிக்கவிருக் கின்றேன்.

மேலும்இன்றைய தினம்(நேற்று) சகல தரப்பினரும் ஒற்றுமையுடன் இந்த இடத்தில் கூடியிருந் து நாகரிகமாக எங்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக பேசிக் கொண்டிருக் கின்றோம். இவ்வாறான நிலையினை என்னுடைய பதவிக்காலம் முழுவதும் நான் பார்க்க வேண்டும்.

இதேபோல் இலங்கையை வறுமையற்ற நாடாக மாற்ற வேண்டும். வறுமையே பல பிரச்சினை களுக்கு காரணமாகின்றது. குறிப்பாக வறுமையினால் நோய் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. மக்களிடம் மகிழ்ச்சியை காண முடியவில்லை. எனவே மகிழ்ச்சியான நோயற்ற சமூகத்தை உருவாக்க உங்கள் சேவகனாக நான் தொடர்ந்தும் உழைப்பேன் என்றார் ஜனாதிபதி.

இந்தக் கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், ஆளுநர் பளிஹக்கார, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், யாழ்.மாவட்ட தமிழ்த தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐந்து மாவட்டங்களின் அரச அதிபர்கள், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேள்ள, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி முன்னதாக நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

யாழ்.விஜயத்தை முடித்துக் கொணட ஜனாதிபதி நேற்று மாலை திருகோணமலைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். (செ-4)

## இலங்கை...

பொது நலவாய பணியகத்தின் இராஜாங்க அமைச்சர் பரோனஸ் அனெலியே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, சமர்ப்பித் திருக்க வேண்டிய இலங்கை மீதான விசாரணை அறிக்கையை சமர்ப்பிப்பதையும், அதுகுறித்த விவாதத்தையும் ஒத்திவைக்க ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செய்த பரிந்துரைக்கு பிரித்தானியா ஆதரவளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீதான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணை அறிக்கையை வெளியிடுவதை செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னரும் தாமதிக்கக் கூடாது என்ற ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளரின் நிலைப்பாட்டை பிரித்தானியா ஏற்றுக் கொள்வதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார். (செ-11)

## உள்நாட்டு...

இதனை குறிப்பிட்டார்.

இதனிடையே, நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு நாட்டுக்கு வருகை தந்த அவர், நேற்று காலை பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது. இதன் போது இரண்டு தரப்பினருக்கும் இடையிலான முக்கிய விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக ஐக்கிய நாடுகளின் இலங்கை காரியாலயம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெப்ரி பெல்ட்மன் முன்னதாக ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்தார். அத்துடன், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

## காணாமல்...

இந்த போராட்டத்தில் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களையும், காணாமற் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த அனைவரையும் பங்கேற்குமாறும் குறித்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை வடபகுதியில் இச்சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பதிவு நடவடிக்கையில் 500ற்கு மேற்பட்டோர் தமது உறவினர்கள் தொடர்பான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

வறுமை காரணமாக பல குடும்பங்கள், காணாமற் போனவர்களைத் தேடும் நடவடிக்கையைக் கைவிட்டுள்ளன.

இதனால் அத்தகைய குடும்பங்களைத் தெரிவுசெய்து வட மாகாண சபை உதவ முன்வரவேண்டுமெனவும், காணாமற் போனவர்களை தேடும் உறவுகளுக்கு வட மாகாணசபை பக்க பலமாக இருக்க வேண்டுமெனவும் அந்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

காணா மற் போனவர்களின் உறவினர்களின் கண்ணீரில் அரசியல் செய்வதை விடுத்து உண்மையாக போராடவேண்டுமெனவும் அரசியல் பழிவாங்கல்களுக்காக காணாமற்போனவர்களின் உறவினர்களினால் முன்னெடுக்கப் படும் போராட்டங்களைப் பயன்படுத்த வேண்டாம் எனவும் அச்சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முறைமையில் மாற்றத்தை 100 நாள் திட்டத்தில் செய்ய முடியாது

## அரசாங்கம் அறிவிப்பு

**(கொழும்பு)**

**தேர்தல் முறைமையில் மாற்றத்தை 100 நாள் திட்டத்தில் செய்ய முடியாது என அவைத் தலைவரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக நிறுவப்பட்ட தினேஸ் குணவர்தன ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்து 13 ஆண்டுகள் கடந்துள்ளன.

இந்த அறிக்கையின் பரிந்துரைகளுக்கு எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரையில் உத்தியோகபூர்வ இணக்கப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.

இவ்வாறான ஓர் பின்னணியில் 100 நாட்களுக்குள் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பிலான பிரேரணை ஒன்றை துரித கதியில் நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியாது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை நீண்ட காலம் கொண்டிருந்தது.

அந்தக் காலத்தில் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பிலான சட்டங்களை அமுல்படுத்தாது. 100 நாட்கள் திட்டத்தில் தேர்தல் முறைமையை மாற்றியமைக்குமாறு வலியுறுத்துவது ஆச்சரியமளிக்கின்றது.

தேர்தல் முறைமை மாற்றியமைப்பது தொடர்பிலான தினேஸ் குணவர்தன ஆணைக்குழுவினை நிறுவுவதற்கான முயற்சிகளை தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவே அப்போது மேற்கொண்டிருந்தார் என லக்ஸ்மன் கிரியெல்ல சிங்கள பத்திரிகையொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும் ஆசிரியருமாகிய கிட்டுனு செல்வராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் ஆசியுரையினை பாடசாலையின் பழைய மாணவராகிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கவுள்ளார். (இ-3)

## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிந்தனைக்களம்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக தவத்திரு முனி யோகர் சுவாமிகளின் 50பவது குருபூசையை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை "யோகர் சுவாமிகளின் ஆன்மீக நெறிப்படுத்தல்" என்னும் பொருள் பற்றிய சிந்தனைக்களம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் காலை 8.45 மணியளவில் ஆரம்பமாகும்.

இதில் பிரதம விருந்தினராக ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிந்தனைக்களத்தில் "தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைகள்" என்னும் பொருளில் பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி வ. மகேஸ்வரனும் "சிவனடிகன்பே சிவயோகமாகக் கண்ட தவமுனி" என்னும் பொருளில் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. பாலகைலாசநாதசர்மாவும் "யோகர் சுவாமிகளின் போதனைகளும் மகாவாக்கியங்களும்" என்னும் பொருளில் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதனும் "சிவதொண்டு ஆற்றுவதே சிவனடியார்களின் தொழில் என்பதை உணர்த்திய ஆன்மீக ஞானி" என்னும் பொருளில் கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி. சாந்தி கேசவனும் "ஈழத்துச் சித்தர்களின் பரம்பரை வரிசையில் தவத்திரு சிவயோக சுவாமிகள்" என்னும் பொருளில் சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரனும் சிறப்புரைகளை ஆற்றுவார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றத் துணைத்தலைவரும் யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமாகிய கலாநிதி ஆறு. திருமுருகனின் நிறைவுரையுடன் முற்பகல் நிகழ்ச்சிகள் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## கட்டுநாயக்க விமான நிலைய உத்தியோகத்தர் மீது தாக்குதல்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் மீது இனந்தெரியாத இருவர் விமானநிலையத்தில் வைத்து தாக்கியுள்ளனர்.


சம்வத்தில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரத்தொழுகமையை சேர்ந்த கே.ஏ.டி. பெர்னாந்து என்பவரே படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. கட்டுநாயக்க விமானநிலையத்தில் இடம்பெறும் முறைகேடுகள். ஊழல்கள் தொடர்பாக தனியார் தொலைக்காட்சிக்கு தகவல் வழங்கினேன் என்றே இரண்டு பேர் என்னை தாக்கினர்.

சம்பவம் தொடர்பாக விமான நிலைய பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## புகைப்படப் பொக்கிஷம்




படங்கள்: வி.விபுலானந், யாழ்ப்பாணம்.
தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான தேர் முட்டி


மாலை வேளையில் பண்ணைக் கடற்கரை


யாழ். பிரதான வீதி தண்ணீர்த்தாங்கி


படங்கள்: ஜெ.பெனியேல், மன்னார்.
மன்னார் பாலம்



சுண்டுக்குளி A9 வீதி, ரயில்வே கடவை.


தேனை வண்டு சுவைக்கிறது (மன்னார்)


படம்: யோ.ஆர்த்திகன், உருத்திரபுரம்.
சூடடி சூடாய் நடக்கிறது (திருவையாறு)


படம்: ஸ்ரீ.காயத்திரி, யாழ்ப்பாணம்.
கோபுர தரிசனம் கோடி புண்ணியம் (இந்தியா)


படம்: எஸ்.சுபகீதன், திருநெல்வேலி.
எம் பாரம்பரியத்தை மறந்து விட்டோமே.

அன்பு வாசகர்களே நீங்களும் புகை[illegible] சிக்கிய புகைப்படங்களை சம்பவ இடத்தைக் குறிப்பிட்டு உங்கள் பெயர், முகவரியுடன் photosofvalampurii@gmail.com எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அல்லது நேரில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல சாரதி, காப்பாளர்களுக்கும்

பேருந்துகளில் முதியோர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், ஊனமுற்றவர்கள், மதகுருமார்கள் ஆகியோருக்கு ஆசனங்கள் வழங்கப்படுவதில்லை என 03.03.2015 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் 6 ஆம் பக்கத்தில் சகல பேருந்துக்களிலும் மனிதநேயம் மதிக்கப்படுதல் வேண்டும் என்ற தலைப்பில் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக யாழ். சாலை யில் கடமையாற்றும் சகல சாரதி காப்பாளர்களும் தமது பேருந்தில் தமது கடமையின் போது பேருந்தில் பயணிக்கும் முதியோர்கள், கர்ப் பிணி தாய்மார்கள், ஊனமுற்றவர்கள், மதகுருமார்கள் ஆகியோருக்கு சபை விதிமுறைப் படியும் தங்களுக்கு வழங்கப்பட்ட இ.போ.ச. பயிற்சியின் படியும் முன்னுரிமை அளிக்கப்பட்டு அவர்களுக்கு பேருந்தில் ஆசனம் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் பேருந்தில் முதியோர்கள் , கர்ப்பிணிதாய்மார்கள், ஊனமுற்றவர்கள், மதகுருமார்கள் ஆகி யோருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வேறு பயணிகள் இருப்பின் அவர்கள் வரும் போது அவர்களு க்கு அவ் ஆசனம் வழங்கப்படுவ துடன் ஒதுக்கப்பட்ட இருக்கைக்கு கூடுதலாக முதியோர்கள், கர்ப்பிணி தாய்மார்கள், ஊனமுற்ற வர்கள், மதகுருமார்கள் பிரயாணிக் கும் போது காப்பாளர் பிரயாணிகளிடம் மிகவும் பணிவாகவும் விநய மாகவும் கோரிக்கை விடுத்து மனி தாபிமான அடிப்படையில் ஆசனத்தை அவர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் என இல ங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை முகாமையாளர் செ. குல பாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ)




# பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யாழ். வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது இப்பாடசாலையில் கல்வி கற்று பயன்பெற்றவர்கள் யாவரையும் பாடசாலையின் வளர்ச்சி கருதி இணைத்துக் கொள்வதுடன் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

எனவே பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வித்தியாலய முதல்வர் ஜே. ஏ.தவநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

# கடை திடீரென தீப்பிடித்து எரிந்ததில் பெறுமதியான பொருட்கள் நாசம்!



(சாவகச்சேரி)

தென்மராட்சி, மீசாலை சந்தியில் அமைந்துள்ள பலசரக்குக் கடையொன்று நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை தீப்பற்றி எரிந்துள்ளது.

கடையிலிருந்த 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசமடைந்துள்ளன.

அதிகாலை 12.30 மணியளவில் சீற்கள் உடையும் சத்தம் கேட்டு அருகிலுள்ளவர்கள் வெளியில் வந்து பார்த்தபோது, கடை தீப்பிடித்து எரிந்ததைக் கண் டுள்ளனர்.

உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு, தீயணைப் புப் பிரிவினர் அவ்விடத்துக்கு வரவழைக்கப்பட்டு ஏனைய கடைகளுக்கும் பரவாமல் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சாவகச் சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-29)

# சிறந்த சுகாதாரச் சேவைக்கான விருதுவழங்கும் நிகழ்வு இன்று

வடமாகாணத்தில் சிறந்த சுகாதார சேவையை வழங்கியமைக்கான விருது வழங்கும் வைபவம் இன்று புதன்கிழமை யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களமானது மாகாண சுகாதார அமைச்சின் வழிகாட்டலுடன் மாகாணத்திலுள்ள சுகாதார முகாமைத்துவ அலுவலகங்கள், மாவட்ட பொது வைத்தியசாலைகள், தள வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் என ஆறு வகைப்பட்ட சுகாதார நிறுவனங்களுக்கிடையே மத்திய சுகாதார அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட சுகாதாரத்துறையின் தரமும் பாதுகாப்பும் என்ற பிரமாண விதிகளுக்கமைய சேவைத்திறன் மதிப்பீட்டினை 2014 இல் மேற்கொண்டிருந்தது.

அந்த வகையில் ஜப்பானிய '5S' நடைமுறையினை சுகாதாரத்துறையில் சிறப்பாக அமுல்படுத்திய நிறுவனங்களை தெரிவு செய்து வெற்றியாளர்களை கௌரவிக்கும் முகமாக சிறந்த சுகாதார சேவைக்கான விருது வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை யாழ். நகரில் அமைந்துள்ள ''ரில்கோ விடுதியில்'' பி.ப. 3.30 மணிக்கு வடமா காண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.ஆர்.ஜூட் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை 5 ஆம்திகதி வியாழக்கிழமை மு.ப 10மணிக்கு இலக்கம் 774,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சங்கத்தின் யாழ். மாவட்ட கிளை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவு, பிரிவுக் குழுக்களுக்கான நிர்வாகிகள் தெரிவு என்பன இடம்பெறவுள்ளன. (இ-3)

# கடலுக்குள் தூக்கி வீசப்பட்ட வாகனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சிதிக்கம் சந்திப்பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை 5மணிக்கு இடம்பெற்ற விபத்தில் கூலர் (டிமோர்) வாகனம் கடலுக்குள் தூக்கிவீசப்பட்டது.

சம்பவத்தில் திக்கம் [illegible] கோயிலடியைச் [illegible] லிங்கம் ரவிதாஸ் (வயது 42) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை படுகாயமடைந்துள்ளார்.

மீன் ஏற்றுவதற்காக திக்கம் சந்திக் கடற்கரைவீதிஓரத்தில் தரித்து நின்ற கூலர் வாகனத்தை வல்வெட்டித்துறையிலிருந்து [illegible] நோக்கி வேகமாக வந்த தனியார் பேருந்து மேற்படி வாகனத்தில் பின்பக்கமாக மோதி அதனை கடலுக்குள் தள்ளியுள்ளது.

விபத்தையடுத்து தப்பிச் சென்ற பேருந்துச் சாரதியை உடுப்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்ததுடன் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)

# வளலாய் பாடசாலை திறக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கிலுள்ள யாழ். வளலாய் அ.மி.த.க. பாடசாலை மீளத் திறக்கப்படவுள் ளது.

இதனைக் கருத்தில் கொண்டு இப்பாடசாலையில் கற்கவிரும்பும் தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான மாணவர்கள் விபரத்தினை எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியில் பதிவு செய்து பாடசாலையை மீளத் திறக்க உதவுமாறு யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் வரதராஜமூர்த்தி அறிவித்துள்ளார். (இ-5)

# இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மேலைப்புலோலி சைவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்இலவச மருத்துவ முகாமில் பற்சிகிச்சை, பொது மருத்துவம், தோல் மருத்துவம் ஆகிய மருத்து வச் சிகிச்சைகள் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் வடமாகாண ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர், பிரதம செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-உ.சாளின்)

# நுகேகொட சவால் கண்டி பேரணிக்கும் செல்லுபடியாகும்

## அசாத்சாலி தெரிவிப்பு

**(கொழும்பு)**

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்காக 5000 பேர் நுகேகொட பேரணிக்கு அழைத்து வந்து காட்டினால் தான் அரசியலைவிட்டு விலகுவதாக தேசிய ஒற்றுமை முன்னணியின் தலைவர் அசாத் சாலி அண்மையில் தெரிவித்திருந்தார். இதே சவால் நாளை மறுதினம் 6 ஆம் திகதி கண்டியில் இடம் பெறவுள்ள பேரணிக் கும் செல்லுபடியாகும் என அவர் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



நுகேகொட பேரணிக்கு வந்தவர்களில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் மாத்திரமே சொல்வதை கேட்கக்கூடியவர்கள். மற்றைய அனைவரும் குடிகாரர்கள் என அவர் தெரிவித்தார்.

எப்படியிருப்பினும் கண்டி பேரணிக்கு தேசியவாதமுடைய சிங்க இலட்சனையுடைய கொடி மற்றும் பௌத்த கொடிகளுடன் யாரேனும் கலந்து கொண்டால் தான் முன்வைத்த சவால் செல்லுபடியாகாதென அசாத்சாலி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# பேருந்து விழுந்து 20 பேர் பலி!

மத்திய சீனாவின் ஹெனான் பகுதி மலை உச்சியிலிருந்து நேற்று முன்தினம் பேருந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் பலியானதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சீனாவின் ஸிங்ஜியாங்கிலிருந்து லின்ஷ் நகரம் நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து, ஹெனான் பகுதி மலை உச்சியில் சென்று கொண்டிருந்துபோது விபத்துக்குள்ளாகி கீழே விழுந்தது. இந்த பயங்கர விபத்தில் சிக்கி குறைந்தது 20 பேர் பலியானதாக தெரியவந்துள்ளது.

மேலும், 13 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 33 1/2
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L லண்டன் PR
தொ.இ: B/4206

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 56 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in hotel manegment & hardware & multimedia / தனியார் தொழில் அபுதாபி
தொ.இ: B/4207

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 11 1/4 செவ் 12 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/4213

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 19 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/4214

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 18
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/4211

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 61 1/4 செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: LLB
தொ.இ: G/4212

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 30 செவ் 12 இல்
தகைமை/தொழில்: HNDM
தொ.இ: G/4216

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 40 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BDS/ பல் வைத்தியர்
தொ.இ: G/4219

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது

அமானா தக்காபுல் (AmanaTakaful) காப்புறுதி நிறுவனமும் யாழ். மாவட்ட ஆட்டோ உரிமையாளர் சங்கமும் இணைந்து பயணிகளின் நலன்கருதி பாதுகாப்பு முன் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

ஆட்டோ உரிமையாளர்களுக்கும் பயணிகளுக்குமிடையிலான போக்குவரத்து தொடர்பாடலுக்கு இலகுவாகவும் பாதுகாப்பு நலனையும் கருத்திற்கொண்டு ஆட்டோசாரதியின் இருக்கைக்குப் பின்புறமாகவுள்ள ஆசனப் பகுதியில் முச்சக்கரவண்டி சார்பான உரிமையாளர் அல்லது சாரதியின் பெயர் முகவரி,முச்சக்கரவண்டித் தரிப்பிடம்,அங்கத்துவ இலக்கம், சாரதியின் புகைப்படம், தொலைபேசி இலக்கம் என்பன பொறிக்கப்பட்ட அட்டை வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் சங்கத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்த அட்டையினை அமானா தக்காபுல் வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மகிந்த - மோடி நடவடிக்கை மேற்கொண்டனர்

## நாமல் விளக்கம்

(கொழும்பு)

இந்தியா - இலங்கை மீனவர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் மிக நெருக்கமாக நடவடிக்கைகளை மேற்கொண்டதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேபோன்று தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் செயற்படுவார் என தான் எதிர்பார்ப்பதாக நாமல் தெரிவித்துள்ளார்.இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கான கலந்துரையாடலை ஒத்திவைக்குமாறு இலங்கை, இந்தியாவிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. அதனை கருத்தில் கொண்டு நாமல் தனது டுவிட்டர் பக்கத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதனால் வடக்கு மீனவர்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், யுத்த காலகட்டத்தில் பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்த மக்களின் வாழ்க்கை மீண்டும் பாதிப்படைவதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பேசும் படம்-42




வேலைக்குச் சென்ற தாய் வீடுவரும் வரை
சேய் இங்கு தாயாகிறாள்...

குறிப்பு: அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல்: valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:-
எஸ். சுமணன்,
வெள்ளாம்போக்கட்டி

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

# தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை இலங்கை அரசாங்கமும் நீக்க வேண்டும்!

## போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம் கோரிக்கை

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையினை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியது போன்று இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமென போரினால் பாதிக்கப் பட்டுள்ள மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.விடுதலைப்புலிகள் மீதான தடை இலங்கையில் நீக்கப்படுவதன் மூலமே தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் உட்பட அனைத்து விதமான பிரச்சனைகளினையும் சுமுகமாக தீர்த்துக் கொள்ள முடியுமெனவும் அவ் இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இது தொடர்பில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இயக்கத்தின் தலைவர் வி.சகாதேவன் தெரிவிக்கையில்,

நாட்டில் போர் முடிவுற்று ஐந்து வருடங்களிற்கு மேலாகின்ற நிலையிலும் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் கூட இன்னும் தீர்த்து வைக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. மீள்குடியேற்றம், காணாமல் போனோர், அரசியல் கைதிகள் என அப்பிரச்சினைகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளினைக்கூட பெற முடியாத நிலையே இங்கு காலம் காலமாக இருந்து வருகின்றது.போரில் பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வித உதவித்திட்டங்கள் இன்றியும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்களாகவே இருந்து வருகின்றனர். அவ் உதவிகளினையும் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது.

தமக்கான உரிமைகள், தேவைகளினை தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ள முற்படும் போது தென் இலங்கையில் அவற்றை தவறாக பிரசாரம் செய்யப்பட்டு புலிகள் தான் அவற்றை கேட்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது.முன்னால் போராளிகளும் தமக்கான வேலை வாய்ப்புக்களினை பெற முயற்சிக்கும் போது தவறாக அடையாளம் காணப்படுகின்றனர்.தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை இலங்கையில் நீக்கப்பட்டால் தென் இலங்கையில் அரசியல் செய்பவர்கள் பிரச்சினைகளினை எதிர் நோக்க வேண்டி வரலாம். ஆனால் நாடு முழுவதிலும் ஒரு புரிந்துணர்வினை இத்தடை நீக்கத்தினூடாக அடைய முடியும்.வடபகுதியில் வாழும் தமிழ் மக்கள் புலிகள் என்ற கருத்தினை பொய்யாக்கி தமிழ் மக்களும் ஒன்றுபட்ட நாட்டிற்குள் ஒற்றுமையாக வாழ முடியும்.

விடுதலைப்புலிகள் மீதான தடையினை நீக்குவதன் மூலம் காணாமல் போகச் செய்யப்பட்டோர், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான இழப்பீடு போன்றவற்றினை எந்த எதிர்ப்பின்றியும் கையாள முடியும். இதனை விட இறுதிப்போரில் என்ன நடந்தது என்பதனையும் வெளிக்கொணர்ந்து உண்மையை கண்டறிய முடியும். நல்லிணக்கத்தினை விரும்பும் புதிய அரசு தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையினை நீக்கி தமிழ் மக்கள் இந்த நாட்டில் எவ்வித அச்சமும் சந்தேகமும் இன்றியும் வாழ்வதற்கு வழியேற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா ஆரம்ப நிகழ்வு

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் 60ஆது ஆண்டு நிறைவையொட்டி வைர விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிமுதல் பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும்.

முதலில் 60 மங்கள விளக்கேற்றலும், அதனைத் தொடர்ந்து பூசை வழிபாடும் நிகழவுள்ளது. மேலும் இவ்வைபவத்தில் நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஸ்ரீ சர்வரூபானந்த மகராஜ், ஹறவாய் ஆதீன குரு சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், சின்மயா மிஷன் தலைவர் பிரம்மச்சாரி தர்ஷன் சைதன்யா, சம்மாங்கோடு மாணிக்கப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ பா. சிற்சபேசக்குருக்கள் ஆகியோரது ஆசியுரைகளும், பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்களது சொற்பொழிவும் இடம்பெறும்.


இதனைத் தொடர்ந்து கலாபூஷணம் சிதம்பரநாதன் குழுவினரின் நாதஸ்வர-தவில் கச்சேரியும் இடம்பெறும்.

அதோடு இந்து மாமன்ற ஆன்மீக இதழான "இந்து ஒளி" வைரவிழா சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் வியாபாரி வெலேசுதா என்ன கூறினார்?

## முன்னாள் அமைச்சர் கேள்வி



**(கொழும்பு) சர்வதேச போதைப்பொருள் வியாபாரி எனக் கூறப்படும் வெலேசுதா வாக்குமூலத்தில் வெளியிட்டதாக கூறப்படும் அனைத்து நபர்களின் பெயர்களையும் வெளியிடுமாறு சவால் விடுப்பதாக முன்னாள் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.**

வெலிகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலேசுதா தொடர்பான விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் பெயர் பேசப்பட்டது.

வெலேசுதாவின் வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட சகல தகவல்களை வெளியிடுமாறு நான் அரசாங்கத்திற்கு சவால் விடுக்கின்றேன்.

வெலே சுதா என்ன கூறினார் என்பதை நாட்டுக்கு தெரியப்படுத்துங்கள். பொலிஸ் ஊடகப் பேச்சாளரால் முடிந்தால், அவற்றை வெளியிடுமாறும் நான் சவால் விடுக்கின்றேன்.

மக்களை ஏமாற்றுவதற்காகவே வெலேசுதா சம்பந்தமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஹெரோயின் போதைப் பொருளை ஒழிக்க வேண்டும் என்ற உண்மையான நோக்கமில்லை எனவும் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இதற்கு பதிலளித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, முடிவடையாத விசாரணை ஒன்றின் சகல தகவல்களையும் நாட்டுக்கு தெரியப்படுத்த முடியாது.

வெலேசுதா என்ற சமந்த குமார தொடர்பாக தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெறுகிறது என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

**வெலே சுதாவின் இலங்கை பிரதிநிதி கைது**

சர்வதேச ஹெரோயின் வியாபாரியான வெலே சுதா என்ற சமந்த குமார என்பவரின் இலங்கைக்கான பிரதான பிரதிநிதியாக செயற்பட்டவர் ஹபரணையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுராஜ் அஹமட் என்ற இந்த நபர் ஹபரணை மொரகஹாவெவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டார்.

அவர் நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் அவரை 7 நாட்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

வெலேசுதாவுக்கு சொந்தமானது எனக் கூறப்படும் கொழும்புக்கு வெளியில் இருக்கும் ஆடம்பர வீடுகள் தொடர்பாகவும் பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# அரசியல் செல்வாக்கை உயர்த்தும் நாடகங்கள் முடிவுக்கு வந்துவிட்டன

அரசியல் செல்வாக்கை வளர்த்து கொள்வதற்காக மக்கள் சொத்துக்களை அழித்து நாடகமாடிய யுகம் முடிவுக்கு வந்து விட்டது என அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்கியின் அனுசரணையில் லுணுகம்வெஹேர பிரதேச செயலக பிரிவில் 180 பேருக்கு தலா ஒரு லட்சம் ரூபா மானிய கடனுதவியை வழங்கும் நிகழ்வில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் நாட்டின் வறிய மக்கள் சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்தனர். வறிய மக்களுக்கு துன்பங்கள் விளைவிக்கப்பட்டன:

100 நாள் வேலைத்திட்டத்தின் அபிவிருத்திக்கு அமைய மக்களின் பணப் பையை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

உண்மையான மக்கள் சேவைக்காக புதிய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும் அமைச்சர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 140 | 80 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 70 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 120 |
| தக்காளி | 40 | 50 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 60 |
| கோவா | 50 | 50 | 70 | 80 |
| கரட் | 200 | 100 | 130 | 150 |
| பூசணி | 100 | 100 | 50 | 80 |
| புடோல் | 60 | 50 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 90 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 50 | 70 |
| பயற்றங்காய் | 100 | 50 | 110 | 100 |
| லீக்ஸ் | 200 | 180 | 150 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | — | 80 |
| கறிமிளகாய் | 250 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 400 | — | 400 |
| போஞ்சி | 200 | 200 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 40 | — |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50-60 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 120 | — | 120 |
| வெங்காயப்பூ | 100 | 140 | — | 160 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 300

அகன்யா சிவஞானம்

**யாரை நீ வெறுத்தாலும்**
**உன்னை மட்டுமாவது**
**நேசிக்கக் கற்றுக்கொள்**
**ஏனெனில் இந்த உலகிலே**
**மிக மிக சிறந்த காதல்**
**உன்னை நீ நேசிப்பது தான்**

மெரினா அந்தோனிப்பிள்ளை




துசா துசானி

ஒருவன் அசைவ உணவு விடுதிக்குச் சென்று
கோழிப் பிரியாணி கேட்டான்.
அந்தப் பிரியாணியைச் சாப்பிட்டுப் பார்த்தான்.
அந்தப் பிரியாணியிலிருந்த கோழிக்கறியுடன்
வேறு கறி கலந்திருப்பது போல் தெரிந்தது.
உடனே சர்வரை அழைத்து இது கோழிக்கறி
மாதிரி தெரியவில்லையே... இதனுடன்
குதிரைக்கறியும் கலந்திருப்பது போல்
தெரிகிறதே என்றான்.சர்வர் முதலில்
மழுப்பினான். பின்பு ஆமாம் சார் வாசனைக்காக
கோழிக்கறியுடன் குதிரைக் கறியும்
சேர்ப்போம் என்றான். எவ்வளவு கலப்பீர்கள்
என்று கேட்க சம அளவு என்றான்.சம
அளவுன்னா எவ்வளவுடா என்றதற்கு இது
கூட தெரியாதா உங்களுக்கு?
ஒரு கோழிக்கு ஒரு குதிரை தான் சம அளவு
என்றான்.அவ்வளவு தான் சாப்பிட வந்தவன்
மயக்கம் போட்டே விழுந்தான்.

பரீணா அல்பிரட்




lover phone
க்கு நான்
recharge
பண்ணினது
அம்மாக்கு
தெரிஞ்சிட்டு
அது தான்
கோபத்தில
என்னை
தூக்கி
நிப்பாட்டிற்றா...

அகல்யா சிவஞானம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முத்திரை மோதிரத்தின் மகிமை

"நங்களும், உங்கள் யோசனையும்!" என்று அவள் ஏளனமாகப் பேசினாலும், பீர்பாலுக்குப் பிச்சைக்காரன் வேடம் போட்டுவிட மும்முரமாக முயன்றாள். பழைய, ஒட்டுப்போட்ட துணிகளைத் தேர்ந்தெடுத்து அணிவித்தாள். பழைய, பிய்ந்துபோன செருப்புகளை அணிவித்தபின்-, முகத்திலும், கழுத்திலும் சாயங்கள் பூசி அசல் பிச்சைக்காரனைப் போல் தோற்றமளிக்குமாறு செய்தாள். வேடம் நன்றாகப் பொருந்தி இருக்கிறது என்று திருப்தி அடைந்தபின் அவரை அனுப்பி வைத்தாள்.

வீட்டை விட்டுப் பிச்சைக்காரன் வேடத்தில் வெளியேறிய பீர்பால் நேராக அரண்மனையை நோக்கி நடந்தார். அரண்மனை வாயிலில் இருந்து ஒதுங்கி ஒரு மறைவான இடத்தில் நின்று கொண்டு காத்து இருந்தார். சிறிது நேரத்தில் அரண்மனை வாயிற் கதவுகள் திறக்க ஒரு பிச்சைக்காரன் வெளியே வந்தான். அவனை காவலர்கள் வணங்கினர்.

'பிச்சைக்காரன் உண்மையில் யார் என்று இவர்களே காட்டிக் கொடுத்துவிட்டனர்' என்று எண்ணிய பீர்பால் "ஏய், பிச்சைக்காரா? உன்னுடன் நானும் சேர்ந்து கொள்ளட்டுமா?" என்று கேட்டார். "யாரடா நீ?" என்று குரலில் அதிகாரம் தொனிக்க பிச்சைக்காரன் வேடத்திலிருந்த அக்பர் பீர்பாலைப் பார்த்துக் கேட்டார்.'


"நானும் உன்னைப் போல் பிச்சைக்காரன்தான்" என்று பீர்பால் சொல்ல, "நான் பிச்சைக்காரன் இல்லை" என்று அக்பர் மறுத்தார்.

"பின்னே என்ன, நீ சக்கரவர்த்தியா?" என்று பீர்பால் வேண்டும் என்றே விஷமமாகக் கேட்க, "ஆம்! நான் அக்பர்! மாறுவேடத்தில் இருக்கிறேன்" என்றார் அக்பர்.

"யாரிடம் கதை விடுகிறாய்? அக்பர் நீதான் என்றால் உன் முத்திரை மோதிரம் எங்கே?" என்று பீர்பால் வம்பு செய்தார்.

"என்னிடம் முத்திரை மோதிரம் இருக்கிறது. ஆனால், அதை உன்னிடம் நான் ஏன் காட்ட வேண்டும்?" என்று அக்பர் கேட்டார்.





"இல்லையானால் நீ சொல்வதை எப்படி நம்புவது? நானும் உன்னைப் போல் பிச்சைக்காரன்! அந்த உரிமையில் கேட்கிறேன்" என்றார் பீர்பால்.

"சந்தேகமிருந்தால் இதோ பார்!" என்று முத்திரை மோதிரத்தை தன் விரலில் இருந்து கழற்றி அக்பர் காட்டினார்.

"அது உண்மையா இல்லை போலியா? கொடு, பார்க்கலாம்" என்று அதை சோதிப்பவர் போல் பீர்பால் அக்பரிடமிருந்து மோதிரத்தை வாங்கிக் கொண்டார்.

"அட! நிஜமாகவே இது சக்கரவர்த்தியின் முத்திரை மோதிரம் தான்! ஆனால், இது உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று பீர்பால் ஆச்சரியப்படுபவர் போல் நடித்தார். "முட்டாளே! நான்தான் அக்பர் என்று சொல்கிறேனே! என்னிடமில்லாமல் வேறு யாரிடம் இது இருக்கும்?" என்று அக்பர் சீறிவிழ, இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட, அங்கு சில காவல் வீரர்கள் வந்தனர். "இவனைப் பிடித்துச் செல்லுங்கள்! இவன் ஒரு திருடன்!" என்று பீர்பால் கூச்சலிட அவர்கள் அக்பரைப் பிடிக்க வர, "முட்டாள்களா! நான்தான சக்கர வர்த்தி!" என்று அக்பர் கூச்சலிட்டார. "அவன் பொய் சொல்கிறான். நான்தான் சக்கர வர்த்தி!" என்று சொல்லி பீர்பால் முத்திரை மோதிரத்தைக் காட்ட, அவர்கள் அக்பரைக் கைது செய்ய முயன்றனர். "சரி சரி! அவனை விட்டுவிடுங்கள்" என்று பீர்பால் கூற அவர்கள் பீர் பாலுக்கு சலாம் செய்துவிட்டுச் சென்றனர்.

மறுநாள் அரண்மனையில் அக்பரைத் தனியாக சந்தித்த பீர்பால. "பிரபு! நேற்று உங்கள் மோதிரத்தைத் தொலைத்து விட்டீர்களா?" என்று கேட்க, அக்பர் 'ஆம்' என்று தலை அசைத்தார்.

"இதோ, உங்களுடைய மோதிரம்!" என்று பீர்பால் மோதிரத்தை அக்பரிடம் கொடுத்தார். உடனே நேற்றிரவு தான் மாறுவேடத்திலிருந்த போது தன்னுடன் தகராறு செய்து அவமானப்படுத்தியது பீர்பால தான் என்று தெரியவர, அக்பர் கோபத்தில் துடித்தார்.

உடனே பீர்பால், "பிரபு! தயவு செய்து கோபப்படாதீர்கள்! உங்களை அவமானப்படுத்துவது என் நோக்கமல்ல! சில நாட்களுக்கு முன் நமக்குள் நடந்த விவாதம் நினைவிருக்கிறதா? என்னுடைய பெருமை, கௌரவம் ஆகியவை என் திறமையினால் பெற்றவை என்றும், உங்களிடம் அதிகாரச் சின்னங்களான மகுடமும், மோதிரமும் இருக்கும் வரைதான் உங்கள் அதிகாரம் செல்லுமென்றும் கூறினேன். அதை நீங்கள் நிரூபித்துக் காட்டச் சொன்னீர்கள், அதைத்தான் நான் நேற்று நிரூபித்துக் காட்டினேன். உங்களிடம் உள்ள முத்திரை மோதிரத்திற்குள்ள சக்தி உங்களுக்கில்லை என்று காட்டிவிட்டேன்" என்றார்.

ஒரு கணம் கோபத்தில் துடித்தாலும், மறுகணமே அக்பருடைய கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. பலமாக சிரித்த அக்பர், "போக்கிரிப் பயலே! சாமர்த்தியமாக என்னை மடக்கிவிட்டாயா? உன்னுடன் சவாலிட்டு ஜெயிக்க முடியுமா? நீ அதிபுத்திசாலி ஆயிற்றே!" என்று புகழ்ந்தவர், பீர்பாலுக்கு பொற்காசுகள் நிரம்பிய ஒரு பட்டுப் பையை பரிசளித்தார். (முற்றும்)

## 03.2015 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1275 - சீன வானியலாளர்கள் முழுமையான சூரிய கிரகணத்தை அவதானித்தனர்.
- 1351 - சியாமின் மன்னராக ராமாதிபோதி முடி சூடினார்.
- 1493 - கடலோடி கொலம்பஸ் அமெரிக்காவுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு லிஸ்பன் திரும்பினார.
- 1519 -ஹேர்னான் சோர்ட்டேஸ் மெக்சிகோவில் தரையிறங்கினான்.
- 1665 - இங்கிலாந்து மன்னன் இரண்டாம் சார்ல்ஸ் நெதர்லாந்து மீது போரை அறிவித்தான்.
- 1793 - பிரெஞ்சுப் படைகள் நெதர்லாந்தின் கீர்ட்ரூடென்பேர்க் நகரைக் கைப்பற்றினர்.
- 1810 - பிரெஞ்சு இராணுவம் போர்த்துக்கல்லில் இருந்து விரட்டப்பட்டது.
- 1813 - நெப்போலியனுடன் போரிட்ட ரஷ்யப் படைகள் ஜேர்மனியின் பேர்லின் நகரை அடைந்தனர். பிரெஞ்சுப் படைகள் எதிர்ப்பேதும் இன்றி நகரை விட்டு வெளியேறினர்.
- 1877 - எமிலி பேர்லீனர் மைக்ரோபோனைக் கண்டு பிடித்தார்.
- 1877 - பியோத்தர் சாய்க்கொவ்ஸ்கியின் ஸ்பான் லேக் பலே நடனம் மொஸ்கோவில் முதற் தடவையாக மேடையேறியது.
- 1882 - பிரித்தானியாவின் முதலாவது மின்சார டிராம் வண்டி கிழக்கு லண்டனில் ஓடவிடப்பட்டது.
- 1894 - ஷங்காயில் ஏற்பட்ட பெரும் தீயில் ஆயிரக் கணக்கான கட்டடங்கள் எரிந்து சாம்பலாகின.
- 1917 - ரஷ்யாவில் பெப்ரவரி புரட்சி வெற்றி பெற்றது.
- 1931 - இந்தியாவில் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும எனவும் மக்களின் அடிமட்டத்தினர் அனைவரும் உப்பை கட்டுப்பாடு ஏதுமின்றி பயன்படுத்தவும் பிரித்தானியாவின் ஆளுநர் எட்வர்ட் வூட் மற்றும் மகாத்மா காந்தி ஆகியோருக்கிடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பின்லாந்து நாசி ஜேர்மனி மீது போரைத் தொடுத்தது.
- 1945 - எலிசபெத் இளவரசி (பின்னர் மகாராணியானவர்) இராணுவத்தில் வாகன செலுத்துனராக இணைந்தார்.
- 1959 - ஐக்கிய அமெரிக்காவின் பயனியர் 4 உலகின் இரண்டாவது (அமெரிக்காவின் முதலாவது) செயற்கைக் கோள் ஆனது.
- 1980 - றொபேட் முகாபே சிம்பாப்வேயின் முதலாவது கறுப்பின பிரதமரானார்.
- 1994 - கொலம்பியா 16 விண்ணோடம் ஏவப்பட்டது.
- 2006 - பயனியர் 10 விண்கலத்துடன் மேற்கொள்ளப்பட்ட கடைசித் தொடர்பு தோல்வியில் முடிந்தது.
- 2006 - அசாம் மாநிலத்தின் பெயர் அசோம் என மாறறப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1938 - அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியர் (இ. 2006)
- 1947 - தெ. நித்தியகீர்த்தி, ஈழத்து, ஆஸ்திரேலிய எழுத்தாளர் (இ. 2009)

### இறப்புக்கள்

- 1193 - சலாடீன், துருக்கிய சுல்தான் (பி. 1137)
- 1941 - லூட்விக் குயிட், நோப்ல் பரிசு பெற்றவர் (பி. 1858)
- 1952 - சார்ள்ஸ் ஷெரிங்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1857)
- 2005 - கலைச்செல்வன், உயிர்நிழல் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

..நீங்களும், பிரபுவும் இணைந்து நடித்தால் நன்றாக இருக்கும். படப்பிடிப்பை சென்னையில் நடத்தினால் தொந்தரவாக இருக்கும். குறிப்பிட்ட நாளில் முடிக்க முடியாது. மைசூருக்கு போய்விடுவோம். வேகமாக படப்பிடிப்பை நடத்தி முடிக்கலாம் என்றார்.

ரஜினி சம்மதித்தார்.

படத்துக்கு திரைக்கதை, வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுதினார். இளையராஜா இசை அமைத்தார்.

**கௌதமி அறிமுகம்**

இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக கௌதமி நடித்தார். தமிழில் அவருக்கு இதுதான் முதல் படம்.

பிரபுவுக்கு ஜோடி சீதா. மற்றும் மனோரமா, சோ, ரவிச்சந்திரன், ராதாரவி, வினுசக்ரவர்த்தி ஆகியோரும் நடித்தனர். பிரபு, ஏற்கனவே ரஜினியின் விசிறி. மிகுந்த உற்சாகத்துடன் ரஜினியுடன் நடித்தார். பிரபு மீது ரஜினிக்கு மிகுந்த அன்பு. தான் செய்யவேண்டிய ஒரு சண்டைக்காட்சியை பிரபுவுக்கு கொடுக்கும்படி சொன்னார். பிரபு சண்டை செய்வதை பார்த்து, ஆகா, பிரமாதம்! என்று உற்சாகப்படுத்தினார்.

**23 நாளில் முடிந்தது**

ரஜினி 25 நாட்கள் கால்ஷீட் கொடுத்திருந்தாலும், அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் 23 நாட்களிலேயே எடுத்து முடிக்கப்பட்டன.

நீங்கள் சென்னைக்குத் திரும்பலாம் என்று ரஜினியிடம் முத்துராமன் கூற, இல்லை. இன்னும் 2 நாட்கள் உங்களுடனேயே தங்கியிருக்கிறேன் என்று ரஜினி சொல்லிவிட்டார். அதன்படியே படப்பிடிப்பு குழுவினருடன் 2 நாள் தங்கி, அவர்களுடன் சாப்பிட்டு, எல்லோருடனும் அன்புடன் பேசி மகிழ்வித்தார், ரஜினி. படப்பிடிப்பின்போது, டிராலியைக் கூட தள்ளி அனைவரையும் உற்சாகப்படுத்தினார் என்று முத்துராமன் கூறினார். 13-4-1988இல் வெளிவந்த "குருசிஷ்ய"னில, அருமையான நகைச்சுவை காட்சிகள் நிறைந்திருந்தன. ரஜினி - பிரபு கூட்டணி, ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது. படம், 125 நாட்கள் ஓடி வெற்றி வாகை சூடியது.


70

ரஜினி- கௌதமி

ரஜினியும், பிரபுவும் இணைந்து நடித்த "தர்மத்தின் தலைவன்" படத்தில், குஷ்பு அறிமுகமானார்.

சாண்டோ சின்னப்ப தேவர் மறைவுக்குப்பின், அவருடைய 'தேவர் பிலிம்ஸ், தண்டாயு தபாணி பிலிம்ஸ் ஆகியவை பல சோதனைகளை சந்திக்க நேரிட்டது. தேவரின் நிறுவனத்தை மீண்டும் தூக்கி நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், அவர்களுக்காக ஒரு படம் பண்ணிக்கொடுக்க முடிவு எடுத்தார், ரஜினி.

அதன்படி உருவான படம்தான் "தர்மத்தின் தலைவன்"

**எஸ்.பி.முத்துராமன்**

படத்தை குறித்த காலத்தில் முடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், டைரக்ஷன் பொறுப்பை தன் ஆஸ்தான டைரக்டர் எஸ்.பி. முத்துராமனிடம் ஒப்படைத்தார்.

படத்தை தண்டாயுதபாணி பிலிம்ஸ் பேனரில் தேவரின் மகன் சி.தண்டாயுதபாணி தயாரித்தார். "கஷ்மே வர்தே" என்ற இந்திப் படத்தின் கதையை தழுவி, திரைக்கதை - வசனம் எழுதினார், பஞ்சு அருணாசலம்.


**குஷ்பு அறிமுகம**

இந்தப் படத்தில் ரஜினியும், பிரபுவும் இணைந்து நடித்தனர். ரஜினிக்கு ஜோடி சுஹாசினி. பிரபுவுக்கு ஜோடி குஷ்பு. இந்தப் படத்தின் மூலம்தான், தமிழ்ப்பட உலகில் குஷ்பு அடியெடுத்து வைத்தார்.

"குஷ்புவை தேர்வு செய்தது எப்படி?" என்று கேட்டதற்கு டைரக்டர் எஸ்.பி.முத்துராமன் கூறியதாவது:- பிரபுவுக்கு ஜோடியாக ஒரு புது முகத்தை அறிமுகம் செய்ய தீர்மானித்தோம்.

அந்த சமயத்தில், குஷ்பு தெலுங்குப்படத்தில் நடித்துக்கொண்டிருந்தார். அவரை வரவழைத்துப் பார்த்தோம். *(தொடரும்)*

---



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 92

...சில கல கலன்னு வளவி பேசுறது பாதி சல சல சலன்னு அவர் வாய் பேசுறது பாதி. வளவிச் சத்தத்துல நீட்டிருவாக பொம்பளைக கைய; வாய்த் தாட்டியத்துலயே இவரு மாட்டிருவாரு வளவிய.

நூல்கயித்துல கோத்திருக்கிற இருபது தோடா வளையலையும் ரெண்டு திருகுத் திருகி ஒரு முறுக்கு முறுக்கி எறக்கி வப்பாரு பாருங்க..

ராசா வீட்டுப் பிள்ளைய வேலக்காரன் தரையில எறக்கி விடுறமாதிரி அம்புட்டுப் பக்குவமா எறக்கிவப்பாரு.

அவரு ஆயுசில ஒத்த வளவி ஒடஞ்சதில்லை.

கடைவிரிச்சு ஊரக் கூட்டி வர்ணப்பாரு பாருங்க. வளவிய சும்மா கெறக்கம் வந்திரும். கெழவிகளுக்கும்.

யம்மா! நீ வானவில்லப் பாத்திருப்பீக.

அது ஏழு நெறம். அதுக்கு மேக் கொண்டதம்மா என் வளவி; இது ஒம்போது நெறம்.

இந்தா அடுக்க வச்சிருக்கேன். எண்ணிப்பாத்துக்குங்க.

பச்சை, செவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், காப்பி, நீலம், செந்தூரம், வெள்ள, ஊதா, சும்மா கண்ணப் பறிச்சு மின்னும் கண்ணாடி வளையல் என்னிய எடுத்துக்கிர்ரியா என்னிய எடுத்துக்கிர்ரியான்னு எல்லா நெறமும் கூப்பிடும்.



எந்தப் பொம்பள கண்ணு எந்த நெறத்துல நெல்குத்தி நிக்கிறதோ, இந்த வளையல எடுத்து சும்மா பொட்டுப்பாரு தாயின்னு மாட்டி விடுவாரு.

ஒரு பொம்பள கைபெறந்த ரசியப் பாத்தவுடனயே அது என்னா அளவுன்னு அவரு கண்ணு சொல்லிப்படும்.

வளவிக்கு நெறம் ஒம்போதுங்கிற மாதிரியே வளவி போடுற பொம்பளைக கை அளவும் ஊர் தேசம் பூரா சுத்துனாலும் ஒம்போதுக்குள்ளதான் அடங்குது.

அரையரைக்கா- முக்கா முக்காலேயரைக்கா- ஒண்ணரை ரெண்டு ரெண்டேயரைக்கா- ரெண்டேகால்-- ரெண்டேகாலரைக்கா இதுதான் பொதுவா பொம்பளைக கைகளுக்குன்னு ஒலகத்துல உண்டான அளவு.

என்னமோ தொட்டிலை ஆட்டுற கை தொல்லுலகை ஆள்ற கையின்னு பாட்டுக் கட்டி பாடுறாகளே ஒலகத்துல எந்தக் கையா இருந்தாலும் இந்த ஒம்போதுக்குள்ள அடக்கம்.

சிலதுக யானைக் காலக் கையின்னு வச்சு பொறந்திருக்கும்.

அதுகள்லாம் கணக்குல சேராது.

சுப்பஞ்செட்டியாரு ஒரு பொம்பளைக்கு வளவி மாட்டிவிட்டாருன்னா அந்தப் பொம்பள வேற ஊருக்கு வாக்கப்பட்டுப் போனாலும் சுப்பஞ் செட்டயார் இந்த ஊருக்கு வாரவரைக்கும் வேற யாருக்கிட்டயும் வளவி போடாமாட்டா.

வளவி போட வார எல்லாப்பொம்பளையும் மக மாதிரிதான் பாப்பாரு மகராசன்.

அவர் வளவிபோடுற சோங்கும் பாங்கும் வேற யாருக்கும் சொல்லிக் குடுத்தெல்லாம் வராது.

வளவி போடுற பிள்ள கைய நீட்னவுடன அத வாங்கி வசதி பண்ணி லேசா ஒரு சொடக்கெடுத்து விடுவாரு.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவை மாற்றிய புரட்சியானது நாற்காலியை மாற்றும் புரட்சியல்ல

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

**நாட்டின் ஆட்சி மாற்றத்தை சிலர் நாற்காலி மாற்றும் எனக் கூறுகின்றனர் எனவும் கடந்த ஆட்சியில் மகிந்தவை வணங்கி மகாராஜா எனக் கூறிக் கொண்டு அவர் கூறிய அனைத்தையும் செய்த அரசியல் வாதிகள், அதிகாரிகள் இதனை சாதாரண நாற்காலியை மாற்றிய புரட்சி என நினைக்கின்றனர் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இவர்கள் மகிந்தவை வணங்கி கொண்டு அனைத்தையும் செய்தனர். தற்போது இந்த பக்கத்திற்கு வந்தும் இதனை செய்கின்றனர். சில ஊடகங்களும் அப்படித்தான் செயற்படுகின்றன.

இது வழமையான நாற்காலியை மாற்றும் புரட்சியல்ல. தெளிவான ஆட்சி மாற்றப் புரட்சி.

நாட்டு மக்களுக்கு தேவையான ஜனநாயக அரசியல் தேவையை நிறைவேற்றுவதற்காக செய்ய வேண்டிய ஆட்சி மாற்ற புரட்சியே நடந்துள்ளது. தனிப்பட்ட கோபத்திற்காக மகிந்தவை தோற்கடிக்க முன்வரவில்லை எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ-5)

# கையூட்டல் பெற்றுக்கொண்ட நீதவானுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

கையூட்டல் பெற்றுக்கொண்ட முன்னாள் மாவட்ட நீதவான் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பெண் குற்றவாளி ஒருவருக்கு சார்பாக தீர்ப்பினை வழங்கும் நோக்கில் மூன்று இலட்சம் ரூபா கையூட்டல் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹோமாகம முன்னாள் மாவட்ட நீதவான் மற்றும் அவரது பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோருக்கு எதிராக நேற்று முன்தினம் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.


கொழும்பு உயர் நீதிமன்றில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஹோமாகம நீதிமன்றின் முன்னாள் நீதவான் சுனில் விக்ரம அபேசிங்க மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் எம்.பி.ஜீ. மஹிந்த கித்சிறி ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

ஹங்வெல்ல இம்புல்கம சியரட்ட ஹோட்டலின் உரிமையாளர் தீபிகா சியாமலி ஜயவீர என்ற பெண்ணுக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கில் அவருக்கு சார்பாக தீர்ப்பளிக்க இந்த மூன்று இலட்சம் ரூபா கையூட்டல் பெற்றுக்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## எள்



Botanical Name-Sesamum indicum
Family-Pedaliaceae
Engl-Gingelly
Sinh-Thala

இது உரோமங்களையுடைய நிமிர்வளர் சிறுசெடியாகும். எதிரிலையமைவு முனையில் மாற்றிலையமைவு பற்கள் மடல்கள் அல்லது பிளவுபட்ட இலை விளிம்புடையது. தனிமலர்கள் நுனியில் அல்லது இலைக்கோணங்களில் அமைந்திருக்கும். சில சமயங்களில் மஞ்சள் குறியீடு சொண்டுமற்றும் சிறிய காம்பினையும் கொண்டிருக்கும். புல்லிவட்டம் 5 காம்புகளையுடையது. மகரந்தத்தாள்கள் 4. அல்லிவட்டம் குழல்வடிவானது. முட்கள் அற்றது. விதைகள் எண்ணற்றவை. முட்டை வடிவானது. கருமை அல்லது வெண்மை நிறமுடையவை. மலர்களும் கனிகளும் வருடம் முழுவதும் இச்செடியில் உருவாக்கப்படும். மாசி, பங்குனி மாதங்களில் இச்செயற்பாடு இடம்பெறும்.

முக்கியமாக வெப்பமான பகுதிகளில் எண்ணெய்ப் பயிராக பயிரிடப்படுகின்றது. விதைகள்மூலம் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவப் பயன்கள்

❖ இதன் விதைகள், இலைகள் மற்றும் வேர்கள் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

❖ 100 கிராம் எள்ளிலுள்ள சத்துக்கள் (விதை) செலுலோசு (நார்) 2.9கிராம், புரதம் 18.3 கிராம், கொழுப்பு 43.3 கிராம், காபோவைதரேற்று 25.0 கிராம், கல்சியம் 1450 மில்லிகிராம், பொஸ்பரஸ் 570 மில்லிகிராம், இரும்பு 10.5 மில்லி கிராம், $\beta$ கரோட்டீன் 60 மைக்ரோகிராம், ரைபோபிளேவின் 340 மைக்ரோகிராம், நியாசின் 4.4 மில்லிகிராம், சக்தி 563 கிலோ கலோரி.

❖ ஒன்றிரண்டு பச்சை இலைகளை எடுத்து குளிர்ந்த நீரில் அலசினால் பசைத்தன்மை நீங்கும். இது புண்பட்ட கண்களைக் கழுவ உதவும்.

❖ 10 கிராம் இலைகளை 1200 மில்லி குளிர்ந்த நீரில் ஊறவிட்டு தினம் இருவேளை 30 மில்லி அளவு எடுத்து 5 நாட்கள் பருக சீதக் கழிச்சல் குணமாகும்.

❖ இதன் இலைக்ளை நன்கு கழுவி அரைத்து கட்டிகளுக்கு கட்ட அவை சீக்கிரம் பழுத்து உடையும்.

❖ இதன் பூக்களை எடுத்து துப்புரவு செய்து குடிநீர் செய்து கண் நோய் உள்ள கண்களைக் கழுவலாம்.

❖ இதன் காய்களை அதன் தோலுடன் சேர்த்து சுட்டு சாம்பலாக்கி அரித்து புண்களுக்கு தூவ புண்கள் ஆறும்.

❖ இதன் விதைகளை சுத்தம் செய்து பொடிசெய்து 2-4 கிராம் அளவு எடுத்து தேனுடன் கலந்து காலை, மாலை ஆகிய நேரங்களில் 3-5 நாட்கள் சாப்பிடக் கொடுக்க மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் வலி தீரும்.

❖ இதன் விதைகளை 30 கிராம் எடுத்து 200 மில்லி நீரில் ஊற வைத்து பருக மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் உதிரச் சிக்கல் தீரும்.

குறிப்பு:- கர்ப்பிணித் தாய்மார்கள் முதல் 5 மாதங்களில் எள்ளை கூடுதலாக எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் கருச்சிதைவை ஏற்படுத்தலாம். ஆனால் கர்ப்பிணித் தாய்மார் 7 ஆம் மாதத்தின் பின் எள், பனங்கட்டி சேர்த்து இடித்து 1,2 உருண்டைகள் வாரத்தில் 3 நாட்கள் சாப்பிடலாம். இதனால் இரத்தவிருத்தி உண்டாவதுடன் பனங்கட்டியுடன் சேர்த்து எடுக்க மலச்சிக்கலும் நீங்கும்.

❖ மூலநோய் உள்ளவர்கள் விதையின் விழுது 5 கிராம் எடுத்து வெண்ணெய்யில் சாப்பிட குருதி வெளியேறல் குறையும்.

❖ விதையை அரைத்து கொதிக்க வைத்து கட்டிகளுக்கு கட்ட அவை பக்குவமடையும்.

❖ எள்ளைச் சேர்த்துப் பக்குவம் செய்த சோற்றை உண்டால் உடல் பலம் பெறும்.

குறிப்பு:-எள்ளு உணவு சகல வயதினருக்கும் பிரயோசனமான அதியுயர் உணவாகக் கருதலாம். எள்ளில் காணப்படும் கொழுப்பானது உறையாத தன்மையுடைய அதியுயர் கொழுப்பாகும். (Unsaturated fat). எனவேதான் இதில் தயாரிக்கும் சகல உணவுகளும் (எள்ளுருண்டை, எள்ளுப் புண்ணாக்கு) சிறந்தவையாகும். எள்ளில் உயிர்ச்சத்து A இற்கு முன்னோடியாகும். கறோட்டீன் போதியளவு காணப்படுகின்றது. அத்துடன் தயமினும் காணப்படுகின்றது.

எள்ளுப்புண்ணாக்கு துப்புரவாக தயாரிக்கப்படல் வேண்டும். எள்ளை நன்றாகக் கழுவிக் காய வைக்க வேண்டும். அதன்பின் துப்புரவானதாக துவைக்கப்பட்டு எண்ணெய் பெற்ற பின்பு பெறப்படுவதையே எள்ளுப்புண்ணாக்கு என்பர். இவ்விதம் பெறப்பட்ட எள்ளுப் புண்ணாக்கை மக்கள் தாராளமாகப் பயன்படுத்தலாம்.

அத்துடன் எள்ளில் காணப்படும் இதர சத்துக்களான கல்சியம், பொஸ்பரஸ் என்பன குழந்தைகளில் என்புருக்கி நோய், பல்முரசு வியாதி ஏற்படா நிலையைப் பாதுகாக்கக்கூடியதாக இருக்கும். அத்துடன் மூத்தோர் மத்தியில் கொலஸ்ட்ரோல் அதிகரிப்பு ஏற்படுத்தா நிலையைப் பேணும் உணவாகவும் அமையும்.

அத்துடன் நீரிழிவு நோயாளிகளுக்கு வழங்கப்படும் வெட்டுமாறன்தூள் (செகராஜசேகரம் செய்யும்1409) எனும் மருந்தில் கார் எள்ளு முக்கியமாக சேருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 140 இந்திய மீனவர்கள் இலங்கைக்கு!

(சென்னை)

**இலங்கை கடற்படையால் தடுத்து வைக்கப்பட்ட படகுகளை மீட்பதற்காக தமிழகத்தில் இருந்து 140 பேர் அடங்கிய மீனவர்கள் குழுவொன்று இன்னும் ஓரிரு தினங்களில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

தமிழக மீனவர்கள் இலங்கை செல்வதற்கான அனுமதிக் கடிதத்தை, இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சினால் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம், கோட்டைப்பட்டினம், மண்டபம், ஜெகதாப்பட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 20 படகுகளின் மூலம் மீனவர்கள் இலங்கைக்கு செல்லவுள்ளதாக தெரிய வருகிறது.

இதேபோன்று, புதுச்சேரி மாநிலம் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 20 பேரும் இலங்கை செல்ல இருப்பதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-5)

# ஆம் ஆத்மியில் உட்கட்சிப் பூசல் அரவிந்த் கெஜ்ரிவால் வேதனை

ஆம் ஆத்மி கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளால் மிகுந்த வேதனைக்குள்ளாகியிருப்பதாக அக்கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், டில்லி முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டுவிட்டரில் அவர் குறிப்பிடும்போது, "கட்சிக்குள் நடைபெறும் விவகாரங்களால் ஆழ்ந்த வேதனையில் இருக்கிறேன்.

இத்தகைய சர்ச்சைகளைப் பெரிதாக்குவது தேர்தலில் நம்மை வெற்றி பெறச் செய்த டில்லி மக்களுக்கு நாம் செய்யும் துரோகமாகும். இந்த கேவலமான சர்ச்சைக்குள் சிக்க நான் விரும்பவில்லை. என் முழுக் கவனமும் டில்லி மாநில நிர்வாகத்திலேயே இருக்கும்" என்று கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ள நிலையில், தேசிய ஒருங்கிணைப்பாளர் பதவியிலிருந்து டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவாலை நீக்க சதி நடந்து வருவதாக அதன் செய்தித் தொடர்பாளர் நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டி இருந்தார்.

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாவது முறையாக போட்டியிட்ட ஆம் ஆத்மி கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. இந்நிலையில், பிரசாந்த் பூஷண் மற்றும் யோகேந்திர யாதவ் ஆகியோர் கட்சியின் செயற்பாடுகளை குறை கூறி செயற்குழு உறுப்பினர்களுக்கு கூட்டாக கடிதம் எழுதியதாக தகவல் வெளியானது.

இதுதவிர பூஷண் தனியாக ஒரு கடிதம் எழுதியதாகவும் கூறப்படுகிறது. இந்தக் கடிதங்களில் கெஜ்ரிவாலின் தன்னிச்சையான செயற்பாடு குறித்தும் விமர்சனம் செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கட்சியை பலவீனப்படுத்தி, யோகேந்திர யாதவை தலைவராக்குவதற்காக பிரசாந்த் பூஷண், அவரது தந்தை சாந்தி பூஷண் மற்றும் யோகேந்திர யாதவ் ஆகியோர் முயற்சிப்பதாக கெஜ்ரிவால் தரப்பு கூறுகிறது.

இந்நிலையில், இத்தகைய சர்ச்சைகளால் தான் மிகுந்த வேதனைக்குள்ளாகியிருப்பதாக, அதன் தேசிய ஒருங்கிணைப்பாளர் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார். (இ-5)

## பாரதச் செய்தி

# மோடி அரசின் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை எதிர்த்து 1000 கி.மீ. தூரத்திற்கு அன்னா ஹசாரே பாத யாத்திரை


(டில்லி)

நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு அவசர சட்டம் கொண்டு வந்துள்ளது.

நடப்பு பாராளுமன்ற கூட்டத் தொடரில் இந்த அவசர சட்டத்துக்கு ஒப்புதல் பெற மத்திய அரசு முயன்று வருகிறது. வருகிற 9ஆம் திகதி இந்த அவசர சட்டம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிய வருகிறது.

நிலம் கையகப்படுத்தும் அவசரச் சட்டத்தில் உள்ள பல முக்கிய அம்சங்களுக்கு பல்வேறு கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. விவசாயிகளை இந்த சட்டம் பாதிக்கும் என்று கூறி சமூக சேவகர் அன்னா ஹசாரேயும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். டில்லியில் மக்களைத் திரட்டி 2 நாட்கள் போராட்டம் நடத்திய அன்னா ஹசாரே அடுத்த கட்டமாக இந்த சட்டத்தை எதிர்த்து நாடு தழுவிய போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளார். இதற்கான அறிவிப்பை அவர் விரைவில் வெளியிட உள்ளார்.


அன்னா ஹசாரேயின் திட்டப்படி அவர் பாத யாத்திரைக்கு அழைப்பு விடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வார்தாவில் இருந்து டில்லி வரை 1000 கிலோ மீற்றர் தூரத்திற்கு அவர் பாதயாத்திரை



செல்ல உள்ளார்.

பாத யாத்திரையை தொடர முடியாத பட்சத்தில் அவர் மோட்டார் சைக்கிள் யாத்திரை நடத்த கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# குற்றத்தை நியாயப்படுத்தும் குற்றவாளி



பாலியல் வல்லுறவுகளுக்கு பெண்களின் தவறான நடத்தையே காரணம் என டில்லி பாலியல் வல்லுறவு சம்பவத்தின் குற்றவாளிகளில் ஒருவரான முகேஷ் ஆவணப்படம் ஒன்றில் அளித்த பேட்டியில் கூறியிருப்பது சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

'ஒரு ஒழுக்கமான பெண் இரவு 9 மணிக்கு மேல் வெளியே சுற்றக் கூடாது. பாலியல் வல்லுறவுக்கு அதிக பொறுப்புடையவர்கள் பெண்கள்தான். வீட்டுப் பணிகளை செய்வதுதான் பெண்களின் கடமை. மதுசாலைகளுக்கும் டிஸ்கோக்களுக்கும் செல்வது அல்ல' என இந்த பேட்டியில் டில்லி பாலியல் வல்லுறவு சம்பவத்தில் குற்றவாளியான முகேஷ் கூறியிருந்தார்.

கடந்த 2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் டில்லியில் நடைபெற்ற கூட்டு பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பில் லெஸ்லீ அட்வின் என்பவர் தயாரித்து இயக்கிய 'India's Daughter - இந்தியாவின் மகள்' என்ற ஆவணப்படத்தில் பேசிய போது அந்த நபர் இதனை தெரிவித்துள்ளார்.

பாலியல் வல்லுறவு குற்றத்துக்கு மரண தண்டனை விதிக்கப்படுவது பெண்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும் முகேஷ் தெரிவித்துள்ளார். இனி பாலியல் வல்லுறவில் ஈடுபடும் ஆண்கள் அந்த பெண்களை உயிரோடு விடமாட்டார்கள் என்று அவர் தெரிவித்தார்.

"முன்பெல்லாம் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படும் பெண்கள் யாரிடமும் அதை பகிர்ந்து கொள்ள மாட்டார்கள் என்று எண்ணி அப்பெண்களை அந்த ஆண்கள் விட்டுவிடுவார்கள். ஆனால் இனி அது நடக்காது" என முகேஷ் கூறினார்.

குற்றங்காணப்பட்டவரின் இந்த கருத்து பல தரப்பினரிடையே கோபத்தை தோற்றுவித்துள்ளது. இது போன்ற ஒரு ஆவணப்படத்தை தான் இயக்கியதற்கான காரணத்தை விபரித்த லெஸ்லீ அட்வின், இந்தியாவில் பெண்ணுரிமைக்காக நடந்த போராட்டம் தன்னை பிரமிக்க வைத்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த பெண் இறந்து போன சமயத்தில் இந்தியாவில் கண்ணீர்ப்புகை குண்டுகளையும், லத்தி தாக்குதலையும் பொருட்படுத்தாது பெண்களின் உரிமைக்காக ஆயிரக்கணக்கானோர் நாடளவில் நடத்திய போராட்டத்தை நினைவு கூர்ந்த அவர், பெண்கள் உரிமைக்காக இந்தியா போல வேறு எந்த நாடும் எழுந்து நின்றதாக தனக்கு நினைவில்லை என்று தெரிவித்துள்ளார்.

லெஸ்லீ அட்வினின் இந்த ஆவணப்படத்தின் முழு வடிவம் எதிர்வரும் 8ஆம் திகதியான சர்வதேச பெண்கள் தினத்தன்று பிரிட்டனில் பிபிசி 4 தொலைக் காட்சியில் வெளியிடப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## முஸ்லிம்கள் சிறப்பு அந்தஸ்து விரும்பினால் பாக்.செல்லட்டும்

இந்தியாவில் இருக்கும் முஸ்லிம்கள் தங்களுக்கு சிறப்பு அந்தஸ்து விரும்பினால் அவர்கள் பாகிஸ்தானுக்கு செல்லட்டும் என சிவசேனா கட்சி தெரிவித்துள்ளது.

சிவசேனா கட்சியின் அதிகாரப்பூர்வ பத்திரிகையான சாம்னாவின் தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, முஸ்லிம்கள் இத்தேசத்தில் இருந்து ஏதாவது விரும்பினார்கள் என்றால் முதலில் அவர்கள் இந்தியாவை தாய்நாடாக மதிக்க வேண்டும். வந்தே மாதரம் என முழங்க வேண்டும். அவர்களுடைய மதத்தை இறுக்கமாக பற்றிக் கொண்டே இந்தியாவில் சலுகைகளை எதிர்பார்க்கக் கூடாது. அப்படி சிறப்பு அந்தஸ்து விரும்பினால் அவர்கள் பாகிஸ்தானுக்கு செல்லட்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

## உலகில் எந்த நாட்டையும் விட

# இந்தியாவில் முஸ்லிம்கள் பாதுகாப்பாக உள்ளனராம்

### பா.ஜ.க.எம்.பி.பேச்சு

(டில்லி)

"உலகின் வேறு எந்த நாட்டையும் விட, இந்தியாவில்தான் முஸ்லிம்கள் பாதுகாப்பாக உள்ளனர்" என்று பா.ஜ.க.எம்.பி.யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் ஹுப்ளியில் நேற்று முன்தினம் நடந்த இந்துக்கள் மாநாட்டில், யோகி ஆதித்யநாத் பேசுகையில், "இந்துக்களுக்கு இயல்பாகவே பரந்த மனப்பான்மை உண்டு.

எனவே, இந்த நாடும் அப்படியே உள்ளது. உலகின் வேறு எந்த நாட்டையும்விட இந்தியாவில்தான் முஸ்லிம்கள் மிகவும் பாதுகாப்பாக உள்ளனர்" என்றார்.

'அன்னை தெரேசா மதப் பிரசாரகர். மக்களை மதமாற்றம் செய்யவே வந்தார்' என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத் கருத்துக்கு ஆதரவு தெரிவித்த யோகி, "ஏழைகளுக்கு சேவை செய்கிறோம் என்ற பெயரில் மத மாற்றம் செய்வது தவறானது.

விஷ்வ இந்து பரிஷத் தலைவர் பிரவீண் தொகாடியாவை, கர்நாடகத்துக்குள் நுழையவிடாமல் காங்கிரஸ் அரசு தடுத்தது மிகப் பெரிய தவறு" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# காங்கிரஸ் கட்சியில் அதிரடி; 5மாநில தலைவர்கள் நீக்கம்

(டில்லி)

காங்கிரஸ் கட்சியின் 5 மாநிலத் தலைவர்கள் நீக்கப்பட்டு, புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடுத்த மாதம் நடைபெறவுள்ள அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் ராகுல் காந்தியை கட்சியின் தலைவராக கொண்டு வருவதற்கான முயற்சியாக இது கருதப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் டில்லி மாநிலத் தலைவராக அஜய் மாக்கன், மகாராஷ்டிர தலைவராக அசோக் சவாண், ஜம்மு-காஷ்மீரில் குலாம் அகமது மிர், குஜராத்தில் பரத்சிங் சோலங்கி, தெலுங்கானாவில் உத்தம் ரெட்டி ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

காங்கிரஸ் செயலாளர் சஞ்சய் நிருபம் மும்பை மண்டல காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தெலுங்கானா மாநில செயல் தலைவராக எம்.எல்.ஏ. மல்லு பாதி விக்ரமார்க்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

ராகுல் காந்தி, கட்சிப் பணியிலிருந்து சில வாரங்களுக்கு விடுமுறை எடுத்துக் கொண்டிருக்கும் நிலையிலும், பட்ஜெட் கூட்டத்தொடர் நிறைவுபெறவுள்ள சூழலிலும் காங்கிரஸ் மேலிடம் இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இதைத் தொடர்ந்து ராகுல் மிக விரைவில் கட்சிப் பணிக்குத் திரும்புவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டில்லி காங்கிரஸ் தலைவர் அர்விந்தர் சிங் லவ்லி, தெலுங்கானா தலைவர் பொன்னால லட்சுமையா, மகாராஷ்டிர தலைவர் மாணிக்ராவ் தாக்ரே, ஜம்மு-காஷ்மீர் தலைவர் சைபுதீன் சோஸ், குஜராத் தலைவர் அர்ஜுன் மோத்வாடியா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். பஞ்சாபிலும் விரைவில் மாற்றம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை எதிர்கொள்ளும்

## மார்ச் மாத சவால்!



இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் ஆட்சி மாற்றம் ஏற்படாமல் போயிருந்தால், இந்த மாதம், இலங்கை அரசாங்கத்துக்கு மிகப்பெரிய சோதனைக் களமாகவே அமைந்திருக்கும். வழக்கமாகவே, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மார்ச் அமர்வு நடைபெறும் காலம், இலங்கை அரசுக்கு கடுமையான நெருக்கடிகள் மிக்க காலமாகவே இருந்திருக்கிறது.

2012ஆம் ஆண்டு, அதிகாரிகள், அமைச்சர்கள் என்று கிட்டத்தட்ட 72 பேர் கொண்ட பெரியதொரு குழு ஜெனீவாவில் முகாமிட்டது. ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காகவே இந்தக் குழு ஜெனீவா சென்றிருந்தது. இந்த ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளதால், புதிய அரசாங்கத்துக்கு ஜெனீவாவில் மார்ச் மாத அழுத்தங்கள் அவ்வளவாக இல்லை. என்றாலும், நாளை ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள பேரவையின் கூட்டத்தொடரில், உயர்மட்டப் பிரதிநிதிகளின் அமர்வில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பங்கேற்கவுள்ளார்.

இதில் அவர், உள்ளநாட்டு விசாரணைப் பொறிமுறை பற்றிய தமது வாக்குறுதிகளை முன்வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர், ஜெனீவாவுக்கான பயணத்தை பீஜிங்கிலிருந்தே ஆரம்பித்திருந்தார்.

கடந்த வெள்ளி, சனி ஆகிய நாட்களை அவர் சீனாவில் கழித்திருந்தார். வெளிவிவகார அமைச்சராக கடந்த ஜனவரி இரண்டாவது வாரத்தில் பொறுப்பேற்ற பின்னர், மங்கள சமரவீர சீனாவுக்கு மேற்கொள்ளும் முதல்பயணம் இதுவாகும்.

அதைவிட இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், கொழும்பிலிருந்து சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள முதல் உயர்மட்டப் பிரமுகரும் இவரேயாவார். எனினும், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் சீனாவுக்கும் இலங்கைக்குமிடையில், நடைபெறும் உயர்மட்ட சந்திப்பு இதுவே என்று கூற முடியாது.

ஏனென்றால் சீன அதிபரின் 'விசேட தூதுவராக உதவி வெளிவிவகார அமைச்சர் லியூ ஜியான்சோ ஏற்கனவே கொழும்புக்கு வந்திருந்தார். இலங்கையில் சீனா மேற்கொள்ளும் திட்டங்களின் எதிர்காலம் குறித்த கேள்வி எழுந்த போது அவற்றை இடைநிறுத்தப் போவதாக இலங்கை அரசாங்கத்திடமிருந்து எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போத சீன அரசின் விசேட தூதுவராக லியூ ஜியான்சோ கொழும்பு வந்தார்.

அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட இலங்கை, இலங்கை அரசின் உயர்மட்டத் தலைவர்களை சந்தித்துப் பேசியிருந்தார். இந்தப் பேச்சுகளின் பின்னர் சீனாவின் திட்டங்கள் குறித்த, முக்கியமான கொழும்புத் துறைமுக நகரத்திட்டம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நகர்வுகளின் மாற்றங்கள் தென்படுகின்றன.

எதிர்கட்சியிலிருந்த போது, தாம் ஆட்சிக்கு வந்தால் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை தடுத்து நிறுத்துவோம் என்று வீர வசனம் பேசிய இப்போதைய அரசாங்கத் தலைவர்கள் அனைவருமே சீன அரசின் விசேட தூதுவரின் வருகைக்குப் பின்னர் அடங்கிப் போயினர். அவர் கொண்டு வந்த செய்தி மிகவும் கடுமையானதாக இருந்திருக்கலாம்.

1.5 பில்லியன் டொலர் செலவில் கொழும்புத் துறைமுக நகரத்தை நிர்மானிக்கும் பொறுப்பை சீனாவே ஏற்றிருந்தது. அந்த உடன்பாடு, முன்னைய அரசாங்கத்தினால் எந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்படாமல் கையெழுத்திடப்பட்டது என்பது உண்மையே என்றாலும் அது ஒரு சர்வதேச இருதரப்பு உடன்பாடு என்பது முக்கியமான விடயம்.

ஒரு சர்வதேச இருதரப்பு உடன்பாட்டை முறித்துக்கொள்வதன் பிரதிபலனை எதிர்கொள்ள நேரிடும் என்று சீனா எச்சரிக்கை செய்திருக்கலாம். அதனால் தான், இந்த திட்டத்தின் 25 சதவீத பணிகள் ஏற்கனவே முடிந்துள்ளதாகவும் தற்போதைய கட்டத்தில் இதனை இடைநிறுத்துவதனால், அதற்கு ஏற்பட்ட செலவை சீனாவுக்கு திருப்பிக் கொடுக்க வேண்டி எற்படும் என்றும், இந்தியாவிடம் கூறியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அதாவது சீனாவின் கொழும்புத் துறைமுக நகரத்திட்டத்தை ரத்துச் செய்யத் தயாரில்லை என்பதே, இலங்கை அரசாங்கத்தின் இறுதி முடிவாக மாறிவிட்டது. ஆனால் அதனை வெளிப்படுத்துவதற்கு இருக்கின்ற தயக்கம் காரணமாக அறிக்கைகள், ஆய்வுகள், மீளாய்வு என்று இழுத்தடிக்கப்படுகிறது, இப்போதைய நிலையில் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தைத் தொடர்வதற்கு அனுமதிக்க இலங்கை அரசாங்கம் தயாராகிவிட்டது. ஆனால் அந்த உடன்பாட்டில் சில திருத்தங்களை மேற்கொள்ள விரும்புகிறது.

கொழும்பு துறைமுக நகரத்தில் 20 ஹெக்ரெயர் நிலப்பரப்பை சீனாவுக்கு சொந்தமாக வழங்கும் உடன்பாட்டு விதிகளை மாற்றியமைக்க விரும்புகிறது இலங்கை. கடந்த வாரம் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தில் உரையாற்றிய அமைச்சர் சம்பிக்க ரணவக்க வெளியிட்ட கருத்துகளில் இருந்து இதனைப் புரிந்துகொள்ள முடிகிறது. அவரது அந்த உரை சீனாவின் பொரு ளாதார பலம் குறித்து இலங்கை அச்சம் கொண்டுள்ளதும் கொழும்புத் துறைமுக நகரத்தில் அதன் இராணுவத் திட்டங்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சத்தைக் கொண்டிருப்பதையும் உணர்த்தியிருக்கிறது.

எப்படியாவது சீனாவுக்கு நிலத்தை உரிமையாக எழுதிக்கொடுக்காத வகையில் உடன்பாட்டை மாற்றியமைப்பதே இப்போதைய இலங்கை அரசாங்கத்தின் சவால்மிக்க காரியம். வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் சீனப்பயணத்திலும் இதற்கே முன்னுரிமை கொடுக்கப்படும் என்று அவரது பயணத்துக்கு முன்னரே எதிர்வு கூறப் பட்டிருந்தது. சீனாவில் அவரது பேச்சுக்கள் தொடர்பான விபரங்கள் ஏதும் இந்தப் பத்தி எழுதப்படும் போது வெளியாக வில்லை. எனி னும் கொழு ம்புத் து[illegible] விவகாரம் [illegible] புதிய அரசாங்கத்[illegible] சீனாவுக்குமிடை யில் இடைவெளியை ஏற்படுத்தியிருக்கின்ற ஒரு விவகாரமாக உள்ளது. புதிய அரசாங்கம் சீனா, இந்தியா, உள்ளிடட எல்லா நாடுகளுடனும் சமமான உறவைப பேணப் போவதாக புதுடில்லியில் வைத்தே கூறியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இது இந்தியாவுக்கு ஒரு வகையில் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம். புதிய அரசாங்கம் சீனாவைக் கைவிட்டு ஒரேடியாக இந்தியா பக்கம் சாய்ந்து விடும் என்று இந்திய அரசாங்கம் எதிர்பார்திருக்கலாம்.

ஆரம்பத்தில் அதற்கான அறிகுறிகள் தென பட்டாலும் அது நடைமுறைச் சாத்திய மான காரியமல்ல என்பது 'இந்தியக் கொள்கை வகுப்பாளருக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள மிகப் பெரியளவிலான பொருளாதார உறவு, அவ்வளவு இலகுவாக அதனிடம் இருந்து இலங்கையை விலகிச்செல்ல இடமளிக்காது. இந்த உண்மைய்யை உணர்ந்து கொண்ட தாலோ, இந்தியாவும் அணிசேரா நாடுகளில் ஒன்று என்பதாலோ மைத்திரிபால சிறிசேன வின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் அடங்கி கொண்டது புதுடில்லி. இந்தியாவும் ஒரு அணிசேரா நாடு என்பதை உணர்ந்து கொண்டே தாம் தொடர்ந்தும் அந்தக் கொள்கையைக் கடை பிடிப்போம் என்று தந்திரமாக நழுவியிருந்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இந்த விடயத்தில் சீனாவையும் இந்தியாவையும் புதிய அரசாங்கம் திறமையா க[illegible]ளாத் தொடங்கியுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லிப் பயணத்தை முடித்து விட்டு வந்தாலும் இந்த மாதம் இந்திய பிரதமர் நரேந்திர மோடி கொழும்புக்கு வரப்போகிறார். சீனா விடயத்தில் இந்தியா மிகவும் எச்சரிக்கையுடன் தான் நடந்து கொள்கிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லி வந்த போது நடத்தப்பட்ட பேச்சுக்களில் விடுபட்ட விவகாரங்களை வைத்து இலங்கைக்கு அவர் அழுத்தங்களைக் கொடுக்க வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக மங்கள சமரவீரவின் பீஜிங் பயணத்தின் பின்னர் ஏற்படும் நிலைமைகளைப் பொறுத்து காய்களை நகர்த்தக் காத்திருக்கிறது இந்தியா. எனவே பிரதமர் நரேந்திர மோடி கொழும்பு வந்து செல்லும் வரை இலங்கை அரசாங்கத்தினால் நிம்மதி கொள்ள முடியும். அது போலவே இந்தியப் பிரதமர் கொழும்பு வந்து சென்றாலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நிம்மதியாக இருக்க முடியாது. ஏனென்றால் இம்மாத இறுதியில் அவர் சீனாவுக்கு தனது முதல் அதிகாரப்பூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அங்கும் அவர் நிச்சயம் அழுத்தங்களை எதிர் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். முன்னைய அரசாங்கம் வெளிநாடுகளுடன் செய்து கொண்ட இருதரப்பு உடன்பாடுகளை மதித்து நடக்க வேண்டியது ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கத்தின் கடப்பாடு என்று ஏற்கனவே சீனத் தரப்பிலிருந்து கருத்து வெளியாகியிருந்தது. எனவே முன்னைய அரசாங்கத்தின் திட்டங்களைத் தொடர்வதற்கான உறுதிப்பாட்டை மைத்திரிபால சிறிசேன விடமிருந்து சீனா எதிர்பார்க்கும். அதற்காக சீனா தனது எல்லா சக்திகளையும் பயன்படுத்தவும் கூடும். அதையும் சமாளித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நிம்மதி கொள்ளலாம். சீனா, இந்தியா என்ற இரண்டு உலக மகா சக்திகளுக்கு இடையேயும் அணி சேராமல் செயற்பட எத்தனிக்கும் புதிய அரசாங்கத்துக்கு இந்த மாதம். ஒரு சோதனைக்குரிய மாதமாகவே இருக்கப் போகிறது. மார்ச் மாத ஜெனீவா பொறியிலிருந்து தப்பித்தாலும் இந்த பொறியில் மாட்டிக் கொண்டிருக்கிறது புதிய அரசாங்கம்.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்த மீது பயமில்லை!



(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் பிரதானிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருக்கும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் காலதாமதமாவதை நான ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கான காரணம் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீதுள்ள பயத்தினால் அல்ல என நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாங்கள் கோத்தபாயவிற்கு பயமில்லை. ஆனால் கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவிற்கும் உயிர் அச்சுறுத்தல்கள் இரு ந்தன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்காக அரசியல் கொள்கை மாறிவிட்டதென நினைத்து அவரது ஒரு பாதுகாப்பை நீக்கும் பட்சத்தில் திடீரென அனர்த்தம் ஒன்று ஏற்பட்டால் அதன் பாரதூரமான விளைவுகளினால் அரசாங்கத்திற்கும் மட்டுமின்றி நாட்டிற்கும் கேடுவிளையும்.

அவர்களது அரசாங்கம் இன்னமும் நடைமுறையில் இருப்பது பழைய அதிகாரிகளின் ஆட்சியில்.

இதனால் சில விசாரணைகளின் தாமதம் தொடர்பாக மக்கள் மன நிலையினை எங்களால் புரிந்து கொள்ள முடியும். எனினும் சீக்கிரம் ஒரு முடிவு எடுக்கப்படும் எனவும் விஜயதாச ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# BMICH பொதுநலவாய செயலகத்தை மூட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம்

கொழும்பில் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டை முன்னிட்டு இலங்கையில் BMICH மண்டபத்தில் திறக்கப்பட்ட செயலகத்தை மூட புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாரியளவில் வாடகை செலுத்தி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இயங்கி வந்த பொது நலவாய நாடுகள் செயற்பாட்டு ஊழியர்களின் நலன்புரி காரியாலயத்தை இந்நிலையத்திலிருந்து உடன் அமுலுக்கு வரும் வகையில் அப்புறப்படுத்துமாறு பதில் வெளி விவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த செயலகத்தின் அனைத்து பணிகளையும் வெளிவிவகார அமைச்சுக்கு மாற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பதில் வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

மிக சிறிய பணிகள் மேற்கொள்ளப்படும பொதுநலவாயு செயலகத்திற்கு மில்லியன் கணக்கான ரூபா செலவிடப்படுகிறது.


இதனால், அந்த செயலகத்தின் பணிகளை வெளிவிவகார அமைச்சின் ஊடாக மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் செயலகத்தில் இருந்த உபகரணங்கள் அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இணையத்தளம் உள்ளிட்ட ஏனைய சேவைகளை பராமரிக்க எமக்கு செலவுகள் தேவைப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சில் இருக்கும் வளங்கள் பொதுநல வாய செயலகத்தை நடத்தி செல்ல போதுமானது எனவும் அஜித் பீ. பெரேரா மேலும் தெரிவித்தார். (இ-5)

# தேசிய நிறைவேற்றுக்குழுவில் அங்கத்துவம் வகிக்கவில்லை

## சோபித தேரர் தெரிவிப்பு



அரசாங்கத்தின் உயர் அமைப்பான தேசிய நிறைவேற்றுக் குழுவில் நான் இடம்பெறவில்லை. எனக்கு இதுவரை அழைப்பு விடுக்கப்படவுமில்லை. நான் இதுவரை அந்த குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் இல்லை என்று என்று சமூக நீதிக்கான அமைப்பின் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமூக நீதிக்கான அமைப்பான நிபுணத்துவ கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றிய சோபித தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேரர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நான் அரசாங்கத்தின் உயர் அமைப்பான தேசிய நிறைவேற்றுக் குழுவில் அங்கத்துவம் வகிப்பதாக பத்திரிகைகளில் பார்த்தேன். ஆனால் ஒரு விடயத்தை இங்கு திட்டவட்டமாக குறிப்பிடுகின்றேன்.

அதாவது அரசாங்கத்தின் உயர் அமைப்பான தேசிய நிறைவேற்றுக்குழுவில் நான் இடம்பெறவில்லை. எனக்கு இதுவரை அரசாங்கத்தின் சார்பில் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படவுமில்லை. நான் இதுவரை கலந்துகொள்ளவும் இல்லை.

நான் தேசிய நிறைவேற்றுக் குழுவின் அங்கத்தவராக இருந்தால் எனக்கு அழைப்பு வந்திருக்கும். எனினும் எனக்கு அவ்வாறான எந்த அழைப்பும் வரவில்லை. இதனை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். மாறாக நான் தேசிய நிறைவேற்றுக்குழுவில் இருப்பதாக யாரும் கருதக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சோர்வு போக வேண்டுமா?

பல்வேறு காரணங்களால் உடம்பு சோர்வடைகிறது. உடல் நலப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை இதனாலலெல்லாம் சோர்வு வந்துவிடுகிறது. இந்தச் சோர்வைப் போக்கி எங்களுடைய மனதைப் புத்துணர்ச்சியோடு வைத்திருக்கிறதற்கு ஏதாவது வழி இருக்கா? அப்படி என்கிற எண்ணம் பல பேரிடம் இருக்கின்றது. அதற்காக ஏதாவது மாத்திரைகளை வாங்கி விழுங்குகிறது வழக்கமாகிவிட்டது. ஆனால் அதைவிட சில உணவுமுறைகளை நாம் கடைப்பிடித்தால் இந்தச் சோர்வு போய் புத்துணர்ச்சி வருவதற்கு வய்ப்பு இருக்கின்றதாம். அதற்குச் சில ஆலோசனைகளைச் சொல்கிறார்கள் மருத்துவக் குறிப்பில். சோளம் இருக்கிறதல்லவா? அந்தச் சோளத்துக்கு உணவில் சிறப்பான இடம் இருக்கிறதாம். அதனால் காலை உணவாகச் சோள அடை சாப்பிடுவது நல்லதாம்.

கார்ன்ஃப்ளாக்ஸ் (Cornflakes) சொல்கிறோம் அல்லவா. அதைச் சாப்பிடலாம். பாப்கார்ன் (Popcorn) கிடைத்தால்கூட சாப்பிடவேண்டும். எந்த வகையிலாவது சோளம் உணவில் இடம்பெற வேண்டும் அப்படி என்கிறார்கள். பின்னர் அதற்கு அடுத்தபடியாக புரதச்சத்து இருக்கின்ற உருளைக்கிழங்கை அவியல் செய்து மதிய உணவில் சேர்த்துக்கொள்ளலாம். மொச்சையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இந்த உருளைக்கிழங்கைச் சாப்பிடக் கூடாது என்று நினைக்கிறது நீரிழிவு நோய்க்காரர்கள் நினைக்கிறது நினைவுக்கு வருகின்றது. ஏனென்றால் பூமிக்கு அடியில் விளைகிறது எதையுமே சாப்பிடக் கூடாதென்று ஓர் ஆலோசனை நமக்குக் கிடைத்திருக்குமே. ஆனால் உருளைக்கிழங்கு சாப்பிடும்போது அரிசி சாப்பாட்டின் அளவைக் குறைக்க வேண்டும். மீன், கோழி சாப்பிடுவதால் கிடைக்கக்கூடிய புரதம் இருக்கிறதல்லவா, அந்த அளவு புரதம் இதனால் கிடைத்திடுமாம். அதனால் சோர்வு ஏற்படாமல் திருப்தியான ஒரு மனோநிலை இதில் கிடைக்குமாம்.

சிலபேர் அதிக நேரம் மன உளைச்சலோடு இருப்பார்கள். அதனோடு வேலை பார்ப்பார்கள். அந்தமாதிரி இருக்கிறவர்கள் நல்ல மன உற்சாகம் அடைய வேண்டும். நம்பிக்கை உணர்ச்சி வர வேண்டுமென்றால் தினம் பாசிப்பருப்பு கூட்டை மதிய உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டுமாம். வாரம் 3 நாட்கள் காராமணியும் சேர்த்துக்கொள்ளலாமாம். இன்னொரு சின்ன யோசனை சொல்கிறார்கள், நல்லெண்ணெய் இருக்கல்லவா? அதை மதிய சாப்பாட்டில் ஊற்றி மற்றவற்றையெல்லாம் சாப்பிடுவதற்கு முன்னர் இரண்டு தேக்கரண்டி விட்டுப் பிசைந்து அப்படியே அதைச் சாப்பிட வேண்டும். இது மூலமாக கிடைக்கிற போலிக் அமிலம் இருக்கல்லவா, அது மனதுக்குப் புத்துணர்ச்சியைத் தரும் என்று சொல்கிறார்கள்.

நரம்பு விற்றமின் அப்படியென்று சொல்லப்படுகின்ற விற்றமின் தயமின். நரம்பு மண்டலத்தை ரொம்ப அமைதியாக வைத்துக் கொள்வதற்கு இது உதவுமாம். இது தசைகளை பாதுகாப்போடு வைத்திருப்பதற்கும் மூளை சரியாகச் செயற்படவும் உதவிகரமாக இருக்கிறதாம். தயமின், காபோவைதரேற்று இவையெல்லாம் உடம்புக்கு நல்ல ஜீரணசக்தி கொடுக்கிறதாம். அதனால் ஓட்ஸ் கஞ்சி ஒருவேளை குடிக்கலாமென்று சொல்கிறார்கள். தயமின் வந்து எளிதாக கிடைத்திடுமாம். அப்படி இல்லையென்றால் தவிடு சலிக்காத கோதுமை மாவில் சப்பாத்தி செய்து கொண்டைக் கடலைக்கூட்டு செய்து தினம் சாப்பிடலாமாம். இதை இரவு நேர உணவாக வைக்கிறது நல்லது. இரவில் நன்றாக தூக்கமும் வருமாம். பகலில் சாப்பிட்டால் அன்றைய வேலைகளை நல்ல சுறுசுறுப்போடு செய்ய முடியுமாம்.

ஒட்சிசனை அனைத்துச் செல்களுக்கும் அனுப்ப வேண்டுமென்றால் தினமும் கீரை ஒன்று எங்களுடைய உணவில் இடம்பெற வேண்டும். மிளகு சேர்த்து செய்யப்பட்ட ரசம், மிளகு சேர்க்கப்பட்ட பொங்கல் இது எங்கள் உணவில் இடம்பெற வேண்டும் என்று வைத்துக்கொண்டால், அதனால் உடலில் எல்லா செல்களுக்கும் ஒட்சிசனை எடுத்துக்கொண்டு போகின்ற சக்தி இதற்கு உண்டு. அதனால் எங்கள் உணவில் இது இருக்கின்ற மாதிரி பார்த்துக் கொள்ள வேண்டும்.

தீர்க்க முடியாத பிரச்சினைகள், ஏக்கங்கள், கவலைகள் அப்படியென்று சிலபேர் எண்ணி எண்ணி குமைந்து கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கு அந்த மாதிரி சூழ்நிலையை மாற்ற வேண்டுமென்றால் அதற்கென்று தனியான உணவே இருக்கிறதாம்.

அதாவது 50 கிராம் வேர்க்கடலை அல்லது சம்பா ரவை இதைச் சாப்பிட்டு வந்தால் போதுமான அளவு மக்னீசியம் உப்பு கிடைத்து விடும். பின்னர் தன்னம்பிக்கை வர ஆரம்பித்துவிடும். உடம்பில் மக்னீசியத்தினுடைய அளவு குறையும்போது எங்களுடைய நோய் எதிர்ப்பு சக்தியும் குறைந்து போய்விட்டதாம். அதனால் அதை ஈடுகட்டுகிற மாதிரி சில உணவுகளை நாங்கள் சேர்த்துகொள்ள வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்கிறார்கள். அதாவது ஏழு பாதாம் பருப்புகள் அல்லது சோயா மொச்சையைக்கூட உணவில் சேர்த்துக் கொள்ளலாமாம்.

இப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம் எங்கள் டாக்டர்கள் சந்தித்துக்கூடக் கேட்டுக்கொள்ளலாம். அப்படிக் கேட்கும்போது டாக்டர் நல்ல டாக்டரா என்று பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் போலி டாக்டரும் சிலபேர் இருக்கிறார்கள். ஒருத்தர் "டாக்டர் தலை சுத்துது" என்றாராம். டாக்டர் திரும்பக் கேட்டிருக்கார், "வலதுபுறமா சுத்துதா, இடதுபுறமா சுத்துதா" என்று.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன்பு மிகு முதலமைச்சருக்கு...

வடமாகண முதலமைச்சரவர்கள் பிரதமருக்கு எழுதியிருந்த ஏனைய விடயங்கள் மத்தியில் "இலங்கையின் கௌரவமிக்க சிங்கள மக்களான அரசியல் நாணயங்கொண்ட பெரும்பான்மையினரை அவர்களைச் சேர்ந்த அரசியல் வாதிகளே பிழையான வழியில் தவராக வழி

**சண்டே லீடர் பத்திரிகையில் திருவாளர் முதலமைச்சரவர்கள் உண்மையாக நடந்து கொள்ளட்டும்! என்னும் தலைப்பில் என். சத்தியமூர்த்தி எழுதிய ஆய்வுக் கட்டுரையின் மொழியாக்கம்**

**தமிழில்- யோகர்**

நடத்துகிறார்கள்" என சுட்டிக் காட்டியிருந்தார். இந்த விடத்தில் பையிள் மேற்கோள் ஒன்றினை சுட்டிக் காட்டியே ஆக வேண்டும். "தனது சகோதரனின் கண்ணிலுள்ள தூசை அப்புரப்படுத்த எண்ணுபவன் முதலில் தனது சொந்த கண்ணிலிருக்கும் துரும்பை அப்புறப்படுத்தட்டும். அப்போதே தூசை நன்றாக பார்க்குமளவுக்கு அவனது கண்கள் தெளிவாகும்."


அண்மையில் வடமாகண சபை "1948 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழர்களுக்குகெதிராக மேற்கொள்ளப் பட்டு வரும் இனவொழிப்பு (Genocide)" நடவடிக்கைகள் மட்டில் விசாரணையொன்றினைக் கோறி மேற்கொண்ட தீர்மானம் மக்கள் மத்தியில் கலவரத்தை தூண்டுவதாகக் இருக்கிறதென பிரதம மந்திரியவர்கள் எழுதியிருந்த அதிகாரப் பூர்வ கடிதத்திற்கே முதலமைச்சரவர்கள் மேற்படி பதிலளித்திரு க்கிறார். இந்த தீர்மானம் வெளிவந்த நேரம் பலருக்கும் விசேடமாக வடக்கு அரசியல் சித்து வேலைக வில் பலக்கப்பட்டிருப்போருக்கும் கூட ஆச்சரியத்தை கொடுத்துள்ளது. இது மட்டில் பல்வேறு வியாக்கியானங்கள் கூறப்பட்ட போதிலும் வடமாகண சபை அழுங்கட்சியில் ஏற்பட்டிருக்கும் உட் குழப்பத்தின் விளைவே இது என்றவொரு கருத்து உள்ளது.

சபையின் கடும்போக்கு உறுப்பினர்களுக்கு மாறன விதத்தில் தெற்குடன் உறவுகளை வளர்த்துக் கொள்ளவே மிதவாத சக்திகள் முயற்சித்ததுடன் அண்மையில் நிகழ்ந்த சுதந்திரதின கொண்டாட்டங்களின் போது இவர்களுள் சிலர் பங்கு பற்றியிருந்தமை இவர்களுடன் மத்தியில் உச்ச முரண் நிலையில் தோற்று வித்திருந்தது. வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை மூடிவிடப் போவதில்லை என்ற புதிய அரசின் அறிவித்தலுக்கான பதிலடியாக இது இருக்குமென வேறு சிலர் நம்புகிற அதேவேளை இலங்கையில் போர்குற்றங்கள் மட்டிலான விசாரணை அறிக்கையை மார்ச்சில் வெளியிடமால் செப்ரம்பர் அமர்விற்கு பிற்போடப்பட்டதாக வெளிவந்த ஐ.நாவின் அறிவிப்பு மீதான ஆத்திரத்தின் வெளிப்பாடே இதுவென மற்றுமொரு சாரரும் நம்பினார்.

காரணம் எதுவாக இருப்பினும் இன வழிப்பு என்ற சொல் மிகையானது அல்லது பொருத்தமற்றது. என்ற அடிப்படையில் முன்னர் ராஜ பக்சவினது நிர்வாகத்தின் போது நிறுத்தி வைக்கப்பட்ட இந்த தீர்மானம் இப்போது வடபகுதி மக்களுடன் உறவு களை சீர் செய்யும் ஆர்வத்துடன் முன்னெடுப்புகள் மேற்கொண்டு வரும் புதிய அரசின் மைத்திரிபால சிறிசேன-ரணில் விக்கிரமசிங்க நிர்வாகத்தின் போது நிறைவேற் றப்பட்டிருப்பது கேள்விகளை எழுப்புவதாகவே இருக்கிறது. நட்பின் பொருட்டு நீட்டப் பட்ட கரங்களுக்குப் பதிலாக முகத்தில் அறையப்பட்ட நிலையாயிற்று. NPCயின் இத்தகைய கடுமையான போக்கு தெற்கிலுள்ள பெரும்பான்மை சார்ந்த கடுங்கோட்பாட்டளர்கள் மத்தியிலும் சிறிதளவும் விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற பிடிவாதமான ஒரு மனோ நிலையை ஏற்படுத்தி விடக் கூடும். அவ்விதமே பிரச்சினைகளுங்கூட தீர்வில்லாமல் இறுகிப்போய் விடக்கூடும். வடமாகண சபையின் ஆத்திர மூட்டும் இத்தகைய போக்கும் விளங்கிக் கொள்வதற்கு மறுக்கும் புதிய சச்சரவுக்கான ஆரம்பமும் நல்லிணக்கத்திற்கான நம்பிக்கையை இழக்கச் செய்கிறது.

வடபகுதி அரசியல் வாதிகளின் இருப்புக்கான ஆதாரமே இன வாதம் தான் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.

வடபகுதி மீதான இந்த அரசியல் வாதிகளின் ஆதிக்க அதிகாரப் பிடிக்கான அடிப்படை புலம் பெயர் தமிழர்களின் ஆக்கமும் ஊக்கமுமேயாகும்.



தொழில் செய்வதற்கான தமது விவ சாய நிலங்களை, காணிகளை விடுவிக்கக் கோருவொரும் சுத்தமான குடி நீர், சிறந்த கல்வி-சுகாதரம், வைத்திய சேவை, வீட்டு வசதிகள் கோரும் வடக்கு மண்ணின் நிரந்தர குடிமக்களது ஆட்சி அல்லாது சண்டை சச்சரவுகளில் ஆதாயம் தேடும் புலம் பெயர்ந்த மக்களின் ஆதரவில் திலைக் கும் இத்தகைய அரசியல் வாதிகளின் ஆட்சியே வட பகுதியில் நடந்து வருகிறது. அண்மைக்காலங்களில் இவ் வட பிரதேசங்களில் ஊடுருவி மேற்கொள்ளப்படும் மக்கள் விடுதலை முன்னனியின் (JVP) இனத்துவ நல்லென்ன பிரசார முயற்சிகளை எதிர்க்கும் வடபகுதி அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளுக்கான கர்ரணம் வெளிப்படையா னதே.

முறையான நீர்வாகப் பாக்குவம் அடையாத வட பகுதியில் நாட்டின் தேசிய கட்சிகள் முன்னரும் மேற்கொண்டது போன்ற அரசியல் நடவடிக்கைகள் மூலம் அங்கு இடம் பிடித்திருக்கும் ஒரே கட்சியின் தனியாதிக்கம் உடைக்கப்பட வேண்டிய சரியான தருணம் இதுவேயாகும்.

"உண்மையில் பெரியதொரு பொய்யையே நீங்கள் கூறுபவராக இருந்தாலும் அதனையே நீங்கள் தொடர்ந்தும் கூறிக் கொண்டிருப்பீர்களேயாகில் இறுதியில் அதுவே நிரூபிக்கப்பட்ட உண்மையாகி விடும்." என்பதே ஹிட்லரது நாசி பிரசார பிரதம அதிகாரியான யோசப் கொய பல்ஸ் என்பவரது கருத்தாகும்.

"நல்லதோ கெட்டதோ" இதுவே பலருக்கும் தெரிந்த கருத்திய கோட்பாடாகவுள்ளது. பொய்யையே அடிக்கடி கேட்கும் மக்களும் அதனை உண்மையென நம்பியும் விடுவார்கள்.

புலம் பெயர்ந்த தமிழ் குழுக்களுங்கூட இந்த தத்துவத்தையே வெற்றிகரமாக நடை முறைப்படுத்தியுள்ளனர். இலங்கை "தழிழருக்கெதிரான 30 வருடகால போரிலிருந்து விடுபட்டுக் கொண்டிருக்கிறது." என்ற அமெரிக்கா ராஜங்க செயலரது இக்கூற்றானது மேற்படி விடயத்தை எடுத்துக் காட்டுகிறதென்பது இலகுவான ஒன்றல்ல. இதனை அவர் கூறியபோது கூடவே பிரசன்னமாயிருந்த இலங்கையின் சமநிலை அதிகாரியால் அவரது இக்கூற்று சவாலுக்குட்படுத்தபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான நிர்வாக செயலர் இப்போது இலங்கையிலேயே உள்ளார். இலங்கையில் இன அழிப்பு எப்போதாவது நிகழ்ந்துள்ளதா? அப்படியாக ஏதாவது நிகழ்ந்திருந்தால் அதற்கான காரணம் அப்போது அதி காரத்திலிருந்த அரசங்கமா அல்லது எல்.ரீ.ரீ.ஈ அமைப்பா என்று கண்டறிந்து கொள்வதற்கு இப்போது யாழ்ப்பாணத்திற்கே கூட அவர் போக வேண்டிய தேவை இருக்காது. நேரடியாக வெள்ளவத்தைக்கே அவர் சென்று அதனை அறிந்து கொள்ள முடியும். இலங்கை உச்ச நீதிமன்றத்தின் கண்ணியமிக்க சேவையில் நேர்மைத் திறம் வாய்ந்த நீதிபதியாகவே இருந்தவர் என்ற மட்டில் ஒருவர் பிரயோகிக்கும் வார்த்தைகளின் நேரான மற்றும் மறைவான பொருள் போன்றவற்றுடன் அதன் நுட்பயாலங்களின் கருத்து வளமும் எவ்விதமான பிரதி பழிப்புகளுடன் கூடிய விளைவுகளை ஏற்படுத்து மென்பது அவருக்கு நன்கு தெரிந்தேயிருக்கும். இதற்குள்ளாக அவர் இப்போது குழப்பத்திற்குரிய இந்த விதமான குதக்கப் பேச்சுக்கள் சமூக-அரசியல் குறைபாடுகளே என்பதை கண்டு கொண்டிருப்பார் என்று நம்பலாம்.

நாட்டின் நீதி பாரிபாலன சேவையின் மிக உயர்ந்த அந்தங்களில் தகுதி வாய்ந்தவர் என அமர்த்தப் பட்ட ஒருவர் இன-மத பேதமற் விதத்தில் நாட்டு மக்களனை வரனதும் தலைவிதியை தீர்மானிப்பதில் அவரது சமீபத்திய செயற்பாடுகள் எவ்விதம் உதவும் என்று தன்னைத் தானே கேட்டுப்பாப்பாரா? அறிவாளி ஒருவருக்கு இத்தகைய செயல் அடுக்குமா என்பது பற்றிஅவர் சிந்திப் பாரா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## உளவாளிகள் அறுவடை

# போகோஹறாம் தீவிரவாதிகள் தலைதுண்டித்து வெறியாட்டம்!

(அபுஜா)

**பாதுகாப்புப் படைக்கு உளவு பார்த்ததாகக் கூறி இரண்டு பேரின் தலையைத் துண்டித்த போகோஹறாம் தீவிரவாதிகள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளைப் போன்று காணொலி வெளியிட்டுள்ளனர்.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. நைஜீரியா நாட்டில் போகோஹறாம் தீவிரவாதிகள் அட்டூழியம் செய்து வருகிறார்கள். அண்டை நாடுகளை சேர்ந்த இராணுவம் நைஜீரியாவுடன் இணைந்து போகோஹறாம் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில் பாதுகாப்பு படைக்கு உளவு பார்த்ததாகக் கூறி இரண்டு பேரின் தலையை வெட்டி கொலை செய்து போகோஹறாம் தீவிரவாதிகள் காணொலி வெளியிட்டுள்ளனர். சிரியா மற்றும் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்திவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை போன்று போகோஹறாம் தீவிரவாதிகளும் அங்கு வெறியாட்டம் ஆடியுள்ளனர்.



காணொலியில் முகத்தை மறைத்துக் கொண்ட தீவிரவாதிகள் இரண்டு நைஜீரியர்களை தலையை வெட்டிக் கொல்லும் காட்சி இடம்பெற்றுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. உளவாளிகள் அறுவடை என்று அழைக்கப்பட்டு காணொலியை சமூக வலைத்தளமான டுவிட்டரில் தீவிரவாதிகளால் வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டவர்கள் தாவூத் முகமது மற்றும் முகமது அவ்லு என்று தெரியவந்துள்ளது.

நைஜீரியா நாட்டின் எல்லைப் பகுதியில் உள்ள சாட் மற்றும் கமரூன் நாடுகளில் போகோஹறாம் தீவிரவாதிகள் அடிக்கடி புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இதனால் அந்த பகுதியில் சாட் இராணுவம். கமரூன் இராணுவம் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## உக்ரைன் விவகாரம் குறித்து அமெரிக்கா - ரஷ்யா பேச்சு



உக்ரைன் உள்நாட்டுப் போர் விவகாரம் குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரியும் ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாரோவும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கிழக்கு உக்ரைன் பகுதியில் அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே கடந்த ஓராண்டாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

தற்போது ஜேர்மனி. பிரான்ஸ் நாடுகளின் முயற்சியால் அங்கு போர் நிறுத்தம் அமுலில் உள்ளது. இருப்பினும் அவ்வப்போது இரு தரப்பிலும் பீரங்கி குண்டுகள் வீசப்படுவதால் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

கிளர்ச்சிப் படைகளுக்கு ரஷ்ய அரசு ஆயுத உதவி வழங்கி வருவதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டி வருகிறது. இதனை ரஷ்யா திட்டவட்டமாக மறுத்து வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யா மீது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இணைந்து பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

இந்நிலையில் ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் பங்கேற்றுள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரியும். ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாரோவும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.

அப்போது உக்ரைன் உள்நாட்டுப் போர் குறித்து இரு தலைவர்களும் விரிவாக விவாதம் நடத்தினர்.

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் போரீஸ் நெம்ட்சோவ் அண்மையில் மர்ம நபரால் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்தும் இருவரும் விவாதித்ததாகக் கூறப்படுகிறது.

எனினும் இருவரின் பேச்சு விபரங்கள் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஹொங்கொங்கில் மீண்டும் கலவரம்



ஹொங்கொங்கில் மீண்டும் கலவரம் வெடித்துள்ளது. இதில் பலர் காயமடைந்தனர். கலவரத்தில் ஈடுபட்டதாக 30இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

ஹொங்கொங்கில் முழுமையான ஜனநாயகம் கோரி கடந்த சில மாதங்களாக மாணவர் அமைப்புகள் பல்வேறு போராட்டங்களை நடத்தின. ஆனால் சீன அரசின் கடும் அடக்குமுறையால் அந்தப் போராட்டங்கள் ஒடுக்கப்பட்டன.

இந்நிலையில். சீனாவிலிருந்து ஹொங்கொங்குக்கு வரும் வர்த்தகர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக உள்ளூர் மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இதை கண்டித்து ஹொங்கொங்கின் பல்வேறு பகுதிகளில் பொது மக்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். யோன் லொங் சந்தைப் பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர்.

இதில் பலர் காயமடைந்தனர். கலவரத்தில் ஈடுபட்டதாக 30இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

ஹொங்கொங்கில் சீனர்கள் பெரும் எண்ணிக்கையில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.


இதற்கு உள்ளூர் மக்கள் ஆரம்பம் முதலே கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் இந்தப் பிரச்சினை இப்போது பூதாகரமாக வெடித்துள்ளது. (இ-5)

## 45 ஆயிரத்திற்கு விற்பனையான வட்டவடிவ அதிசய கோழிமுட்டை

(லண்டன்)

பிரபல இணையத்தளமான ஈபே-யில் ஒரு கோழியின் முட்டை 45 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனையாகியுள்ளது. இங்கிலாந்தின் லட்சிங்டன்னில் வசித்து வருபவர் கிம் பிராட்டன்.

அவரது தோட்டத்தில் கோழிகளை வளர்த்து வருகிறார். இந்நிலையில் அவரது கோழிகளில் செல்லமாக வளர்ந்து வந்த பிங் பாங் அதிசயமாக பந்து போல வட்ட வடிவத்தில் முட்டையிட்டது.



ஆச்சரியத்தில் வாயடைத்து போன கிம் இந்த முட்டையை ஒன்லைனில் விற்க முடிவு செய்தார். பின்னர் ஈபே-இணையத் தளத்தில் விற்பனைக்கு விளம்பரம் செய்தார்.

இதை பார்த்து பலர் வாங்குவதற்கு முன்வந்தனர். குறிப்பாக 64 பேர் ஏலம் கேட்பது போல மாறி மாறி அதிக விலைக்கு கேட்டனர்.

அவர்களில் பெரும்பாலானோர் அந்த அதிசய முட்டையை வாங்கி பாதுகாக்கவே முடிவு செய்திருந்தனர். இறுதியாக ஒருவருக்கு 45 ஆயிரம் ரூபா (480 பவுண்டுகள்) விலைக்கு விற்கப்பட்டது. வாங்கியவரின் விபரம் தெரியவில்லை.

அந்த முட்டையை விற்ற பணத்தை அவரது நண்பரின் மகன் நோயால் இறந்ததன் நினைவாக சிஸ்டிக் பிப்ரோசிஸ் என்ற அமைப்புக்கு நன்கொடையாக கொடுத்து விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அரச ஊடகங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன!

(கொழும்பு)

இலங்கையில் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அரச ஊடக நிறுவனங்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சார்பாக, மிக மோசமாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்து அரச ஊடக நிறுவனங்கள் செயற்பட்டது மட்டுமன்றி அவரது பிரதான போட்டி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன மீது சேறு பூசும் செய்திகளையும் வெளியிட்டதாகவும் ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் குற்றம் சாட்டியுள்ளது.

அரச ஊடக நிறுவனங்கள் பொதுமக்களின் சொத்துக்கள் என்ற ரீதியில் பக்கச்சார்பற்ற பொது நிறுவனங்களாக செயற்பட்டனவா? எனறு ஆராய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு ஆய்வுகளிலேயே இந்த விபரங்கள் வெளியாகியுள்ளதாக அந்த நிறுவனம் புள்ளிவிபரங்களை வெளியிட்டுள்ளது.

அரச தொலைக்காட்சி மற்றும் வானொலி நிறுவனங்கள் மற்றும் தினகரன் நிறுவனத்தின் அச்சு ஊடகங்களின், தேர்தலுக்கு முன்னரான ஒருமாத கால செயற்பாடுகளை ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் ஆராய்ந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

"வசந்தம் தொலைக்காட்சி- தேர்தல் காலத்தில் செய்திகளுக்காக ஒதுக்கியிருந்த 323 நிமிட ங்களில் 197 நிமிடங்கள் தேர்தலுடன் தொடர்புடையவை" என்று கூறிய மூத்த ஊடகவியலாளர் ரவி ரத்னவேல், "அதில் 135 நிமிடங்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கு 13 நிமிடங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன" என்று கூறினார்.

அவ்வாறே, தினகரன் அரச ஊடக நிறுவனத்தின் அச்சு ஊடகங்களும் மகிந்த ராஜபக்ஷவுக்கே முன்னுரிமை கொடுத்து செய்தி வெளியிட்டிருந்ததாகவும் ஏனைய வேட்பாளர்களுக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும் தமிழ் மொழிமூல அரச ஊடக செய்திகளை கண்காணித்து அறிக்கையிட்ட மூத்த ஊடகவியலாளர் ரவி ரத்னவேல் தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் அரச ஊடகங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான கூடுதல் அதிகாரங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கக்கூடிய விதத்தில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் குறித்த ஆய்வறிக்கை பரிந்துரை செய்துள்ளது.

அவ்வாறே, ஊடகங்களை நெறிப்படுத்துவதற்கான சுயாதீன ஆணையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதும் இந்த ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் ஒன்று என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# காதலனின் பெயரினைக் கிறுக்கிய காதலிக்கு இரண்டு வருடம் சிறை!

சிகிரியா கண்ணாடிச் சுவரில் கிறுக்கி சேதப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த யுவதிக்கு இரண்டு வருட சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

23 வயதான சின்னத்தம்பி உதேனி என்ற யுவதியே இவ்வாறு சிறை வைக்கப்பட்டுள்ளார். உதேனி கடந்த சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

தனியார் கைத்தொழிற்சாலையொன்றில் பணியாற்றி வரும் உதேனி, சிகிரியாவிற்கு சுற்றுலா சென்றிருந்தபோது வரலாற்றுச் சிறப்பு மிக்க சிகிரியா கண்ணாடிச் சுவரில் ஆங்கில எழுத்துக்களால் தனது காதலன் பெயரை கிறுக்கி சேதப்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அகழ்வாராய்ச்சி திணைக்களம் நீதிமன்றில் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்து குற்ற, எழுத்துக்களை அழிக்க முடியாது என்று கூறியுள்ளது.

இதனை அடுத்து கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த யுவதி, தம்புள்ள நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது இரண்டு வருடகால சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சம்பூர் மீள்குடியேற்றத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றத்திற்கே முன்னுரிமை வழங்கப்படும் என மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களில் சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் குறித்தே முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும்,

அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி விரைவில் அவர்களை மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் வாக்குறுதியளித்துள்ளார். (இ-5)

# பொருட்களின் விலைகளை குறைக்காத விநியோகஸ்தர்களுக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

**வரவு செலவு திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட பொருட்களின் விலைக்குறைப்பை அமுல்படுத்த தவறிய 400 விநியோகஸ்தர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் சேவைகள் அதிகாரசபை தெரிவித்துள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான சுற்றிவளைப்புகள் அதிக மாக காணப்படும் என நுகர்வோர் சேவைகள் அதிகார சபையின் அதிகாரி ஜே.எம்.ஏ.டக்ளஸ் தெரிவித்துள்ளார்.**

ஜனவரி 29ஆம் திகதி முதல் விலை குறைப்பிற்கு ஏற்ப விற்பனை செய்யப்படுகிறதா? என்பதனை அறிய நாடு முழுவதும் துறைசார் அதிகாரிகள் சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த சுற்றிவளைப்பின் மூலம 900இற்கும் அதிகமானோர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 400 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபை தெரிவித்து ள்ளது.

அப்படி யாரேனும் விநியோகஸ்தர்கள் அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்தால் அவர்கள் தொடர்பாக நுகர்வோர் சேவைகள் அதிகாரசபைக்கு அறிவிக்குமாறு ஜே.எம்.ஏ.டக்ளஸ் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அறிவிக்க முடியும்

குறுகிய தொலைபேசி எண் - 1977, முக்கிய சோதனைகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் அசேல பண்டார - 077 108 8922, உதவிப் பணிப்பாளர் விஜேசிங்க - 077 108 8907,பொதுத் தொலைபேசி - 011 775 5481/482/483 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு

## திருமதி நடராஜா தவமணி



உடுப்பிட்டி ராஜகிரி சந்தனத்தறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி நடராஜா கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் .இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கரம்பலாலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


## Dr.தியாகராஜா கங்காதரன்



ஐயனார் கோவில் வீதி வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி தியாகராஜா கங்காதரன் கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை பி.ப 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## மயில்வாகனம் சுப்பிரமணியம்



துரைவீதி இணுவில் தெற்கைப் பிறப்பிடமா கவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுப்பிரமணியம் கடந்த முதலாம் திகதி ஞாயிற்று க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## திருமதி நடேஸ்வரன் விஜயலட்சுமி



புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம் குறிகட்டுவானைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நடேஸ்வரன் விஜயலட்சுமி கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை லண்டனில் நடைபெறும்.

## கந்தையா புஸ்பராஜா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Saint Denis ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா புஸ்பராஜா கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் Chambre Mortuaie Pitie Salpetriere. 22 rue bruant 750 13 paris, France (metro Chevaleret) என்னும் முகவ ரியி ல் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## கணேசன் ஜெயசந்திரன்



ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் லண்டன் Woodford ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் ஜெயசந்திரன் கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமான்ார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் Carter Jack Pavilion, Oakeild Playing Fields, Fencepiece Road, Ilford IG6 2JL. UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப் படும்.

## தில்லையம்பலம் கந்தசாமி

(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கந்தசாமி கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி மு.ப 11 மணிமுதல் St.John's Dixie Cemetery & Crematorium.737 Dundas St E mississauge. ON L4Y 2B5, Canada என்னும் முக வரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## திருமதி.தெட்சணாமூர்த்தி முத்துலட்சுமி



சுன்னாகம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட தெட்சணாமூர்த்தி முத்துலட்சுமி கடந்த 26 ஆம் திகதி வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி மு.ப 7.30 மணி முதல் Ravidassia Community Centre, 26 Carlyle Rd, Manor Park, London E126 BN UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் 10 ஏக்கரில் பயிரிடப்பட்ட உருளைக்கிழங்குகள் அறுவடை விழா

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் விடத்தல்தீவு விவசாயப் போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட பெரியமடு கிழக்கு கிராமத்தில் உருளைக்கிழங்கு செய்கை அறுவடை வயல் விழா அண்மையில் நடைபெற்றது என மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனோவா ரெட் லசோடா போன்ற உருளைக்கிழங்கு இனங்கள் 10 ஏக்கர் நிலப் பரப்பில் முன்மாதிரிச் செய்கையாக பயிரிடுவதற்கு இலவச விதை கிழங்குகளை 48 பயனாளிகளுக்கு விவசாய் திணைக்களம் வழங்கியது.

பெரியமடு, ஈச்சலவக்கை, காயாநகர், வெள்ளாங்குளம், கணேசபுரம், சீதுவிநாய கபுரம், பாலம்பிட்டி, போன்ற கிராமங்களிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

பிரதேச விவசாயிகள் மத்தியில் உருளைக்கிழங்கு செய்கையை ஊக்குவித்து மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் பெரியமடு கிழக்கு பள்ளிவாசலுக்கு அருகாமையிலுள்ள ஜனாப் ஏ.சிராசிக் பரீட் என்பவரின் வயலில் பயிரிடப்பட்டிருந்த உருளைக்கிழங்கு செய்கையில் அறுவடை விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற குறித்த விழாவில் கன்னொருவ பூங்கனியில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி ஹேமல் பொன்சேகா பிரதம விருந்தினராகவும் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், நுவரெலியா மாவட்ட விவசாயப்பணிப்பாளர் AGC பாபு, திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி கலாநிதி கருணைநாதன் மற்றும் மஹாஎலிய நிறுவனப்பணிப்பாளர் ஆனந்த வீரசூரிய ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்குபற்றியிருந்தனர்.

மேலும் நேரகாலத்துடன் விதைகிழங்கை பெற்றுத்தர ஒழுங்குகளை மேற்கொண்டு தருமாறும் சந்தைப்படுத்தல் வசதிகளையும் செய்து தருமாறும் அங்கு குழுமியிருந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அறுவடை விழாவின் முடிவில் விருந்தினர்கள் களவிஜயத்தை மேற்கொண்டு உருளைக்கிழங்கு செய்கையில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி நேரடியாக கலந்துரையாடியதுடன் தொழில்நுட்ப ஆலோசனையும் வழங்கினர்.

எதிர்வரும் காலங்களில் போதுமானளவு பயிற்சிகளை வழங்க ஏற்பாடு செய்து தருவதாகவும் உறுதியளித்திருந்தனர். (அ-2)

# வெள்ளத்தில் மூழ்குகின்றது தம்பனை; மக்கள் வேறிடத்தில் குடியேறுவர்



மன்னார் மடு - தம்பனைக்குளம் கிராம மக்களை வேறிடத்திற்கு மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மடு பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசோதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தம்பனைக்குளம் கிராம மக்களை மாற்றிடமாக மடு பூமலர்ந்தான் கிராமத்திற்கு மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக அக்கிராமம் வெள்ளத்தில் மூழ்குவதோடு அங்கு வாழ்ந்து வருகின்ற 364 குடும்பங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் எவ்வித தொழில் வாய்ப்புக்களையும் மேற்கொள்ள முடியாத நிலையில், வெள்ளத்தினால் கால் நடைகளும் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மக்களின் நலன் கருதி மடு பிரதான வீதியிலுள்ள பூமலர்ந்தான் கிராமத்தில் காடுகளை வெட்டி அக்கிராம மக்களை மீள்குடியேற்ற முடிவெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் தம்பனைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 273 குடும்பங்கள் தமது சுய விருப்பத்தில் பூமலர்ந்தான் கிராமத்தில் மீள் குடியேறுவதற்கு சம்மதம் தெரி வித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-250)

# கிளி.கந்தசாமி கோயிலில் உண்ணாவிரத போராட்டம்

## வெள்ளியன்று நடைபெறும்

(கிளிநொச்சி)

இராணுவத்தினாலும் ஒட்டுக்குழுக்களாலும் இதுவரை காலமும் மற்றும் குறிப்பாக முள்ளிவாய்க்கால் பெரும்போரின் போதும் அதன் பின்பும் காணாமற் போகச் செய்யப்பட்ட உறவுகளை மீட்டுத்தரக்கோரி தொடர்ந்து இலங்கையின் எல்லா அரசாங்கங்களையும் வேணடியும் இதுவரையில் எந்த தீர்வும் எட்டப்படாத நிலையில் காணாமற் போகச்செய்யப்பட்ட உறவுகளும் சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் உறவுகளும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியில் இருந்து கிளிநொச்சி கந்தசாமி கோவில் வளாகத்தில் அடையாள உண்ணாவிரதம் ஒன்றை செய்வதற்கு தீர்மானிததுள்ளனர்.

இந்த உண்ணாவிரத போராட்டத்திற்கு வடக்கு, கிழக்கிலுள்ள சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனிதவுரிமை அமைப்புக்கள், மதகுருமார்கள், புத்திஜீவிகள், கல்வி சமூகத்தை சேர்ந்தவர்கள், அரசியல் கட்சிகளை சேர்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள், காணாமற் போகச் செய்யப்பட்ட உறவுகளின் உறவுகள், சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் உறவுகள் அனைவரையும் ஆதரவு வழங்கி கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட காணாமற் போகச் செய்யப்பட்ட உறவுகள் சிறைக்கைதிகளின் உறவுகள் போன்றவற்றிற்கான அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (அ-2)




# கடவை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, ஆனந்தபுரம் - உதயநகர் ஆகியவற்றை இணைக்கும் வீதியில் பாதுகாப்பான புகையிரத கடவை அமைக்கப்படாமையால் ஆபத்து மிகுந்த நிலையில் தினமும் பயணிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

உதயநகர், அம்பாள்குளம், ஆனந்தபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்கள் இந்த பாதையூடாக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு செல்கின்றனர்.

எனவே, புகையிரதப் பாதைக்கான கடவையை அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2)

# புலம்பெயர் உறவுகளால் மாணவர்களுக்கு உதவி

(கிளிநொச்சி)

உழைப்பாளர்களை நம் சமூகம் இழந்துள்ளதுடன் பலர் யுத்தம் காரணமாக மாற்றுவலுவுள்ளவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுவலுவுள்ள மாணவர்கள் மற்றும் மாற்றுவலுவுள்ள பெற்றோரின் பிள்ளைகளின் நன்மை கருதி பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஊடாக லண்டன் வாழ் தமிழ் உறவு ஒருவர் தன்னுடைய சொந்தப்பணத்தில் கற்றலுக்கான நிதியை வழங்கவுள்ளார். இதனை வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நான் இங்கு முன்னே இருந்து பார்க்கின்ற பொழுது அவதானித்தேன். பல மாணவர்களுக்கு சப்பாத்து இல்லை. சிலருடைய சப்பாத்துக்களில் ஓட்டை விழுந்து விட்டன.

எமது மாணவர்களுக்கு தேவைகள் தினம் தினம் அதிகரித்தே செல்கின்றன. இன்று கிடைக்கின்ற இந்த உதவியில் ஏதாவது ஒரு கல்விக்கான தேவையை பூர்த்தி செய்வீர்களென நம்புகின்றேன்.

இங்கு உரையாற்றிய தவிசாளர் சொன்னது போல் அப்பியாசக் கொப்பிகள் வேகமாய் முடிந்துவிட்டால் அதை வாங்க பணம் தேவை. எங்கள் குடும்பங்களிடம் பொருளாதார பிரச்சினை [illegible] இருக்கின்றது. அதனால் அப்பியாசக் கொப்பிகளில் சிறிய எழுத்துக்களில் நெருக்கி நெருக்கி சில மாணவர் எழுதி அப்பியாசக் கொப்பிகள் வேகமாக முடிந்து போகாமல் பார்க்கின்றார்கள் என்ற செய்தி கவலைக்குரியதுதான்.



போர் காரணமாக உழைப்பாளர்களை நம் சமூகம் இழந்துள்ளதுடன் மாற்றுவலுவுள்ளவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் எம் சமூகத்திற்கு இப்பொழுதும் ஆதரவு தேவையாக இருக்கின்றது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் 2792 மாற்றுத் திறனாளிகள்

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 792 மாற்று வலுவுடையோரும் 12 ஆயிரத்து 756 முதியவர்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியவாறு வாழ்வாதாரத்திற்குரிய தொழில் வாய்ப்பின்றி வாழ்ந்து வருவதாக ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வன்னியில் நடைபெற்ற யுத்த சூழ்நிலை காரணமாகவும் மற்றும் ஏனைய வழிகளாலும் 2 ஆயிரத்து 792 இற்கு மேற்பட்ட மாற்று வலுவுடையோர் வாழ்வாதாரத்திற்குரிய தொழில் வாய்ப்பின்றி, வாழ்ந்து வருகின்றனர்.

அத்துடன் வன்னி யுத்தத்தின் போது உறவுகளை இழந்த நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கி வாழும் நிலையில், ஆயிரக்கணக்கான முதியவர்கள் இம் மாவட்டத்தில் காணப்படுகின்றனர்.

இவர்களில் பிரதேச செயலக ரீதியாக கரைச்சி பிரதேச செயலக பிரிவின் ஆயிரத்து 434 மாற்றுத் திறனாளிகளும் 8 ஆயிரத்து 560 முதியவர்களும் உள்ளனர்.

அத்துடன் பச்சிலைப்பள்ளி (பளை) பிரதேச செயலக பிரிவில் 250 மாற்றுத் திறனாளிகளும் 2 ஆயிரத்து 661 முதியவர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை பூநகரி பிரதேச செயலக பிரிவில் 516 மாற்று வலுவுடையோரும் 578 முதியவர்களும் காணப்படுகின்றனர்.

இதேபோன்று கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 592 மாற்று வலுவுடையோரும் 957 முதியவர்களுமாக மொத்தம் 2 ஆயிரத்து 792 மாற்று வலுவுடையோரும் 12 ஆயிரத்து 756 முதியவர்களுமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருவதாக புள்ளி விபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2-15)

## இந்து ஆலயங்களுக்கு கைந்நூல் வழங்கும் நிகழ்வு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்களுக்கான வழிகாட்டல் கைந்நூல் வழங்கும் நிகழ்வும் அது தொடர்பான கருத்தரங்கும் எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள கூட்டுறவு மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே இந் நிகழ்விற்கு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள் ஒவ்வொன்றினதும் பரிபாலன சபை உறுப்பினர் இருவரை தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (அ-2)

## சித்தி விநாயகர் ஆலய விசேட பொதுக்கூட்டம்

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் மாவடி சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையின் செயலாளர் ச.சிவானந்தம் அறிவித்துள்ளார்.

கடந்த கால போர் சூழ்நிலை காரணமாக சேதம் அடைந்துள்ள ஆலய கட்டடங்களை புனரமைப்பு செய்வது தொடர்பாகவும் கும்பாபிஷேகம் செய்வது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதால் நாடு தழுவிய ரீதியில் வாழும் ஆலய பக்தர்களை தவறாது இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

## தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் நழுவ விடப்படுகின்றன

### சந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

மாற்றம் என்பது தமிழ் மக்களின் சிந்தனைகளில் ஏற்பட வேண்டும். நீண்ட காலமாக தமிழ் மக்களின் மனங்களிலும். சிந்தனைகளிலும் மாற்றம் ஏற்படவில்லை. ஏற்படவிடவுமில்லை. எனவே தமிழ் மக்களின் வாழ்க்கையிலும். நீண்ட் கால பிரச்சினைக்கான தீர்விலும் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் முதலில் மக்களின் சிந்தனைகளில் ஏற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அம்பாள்குளம் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

உண்மையிலேயே மாற்றம் என்பது தென்னிலங்கையில் ஏற்படுவது முக்கியமல்ல. தமிழ் மக்களிடம் ஏற்பட வேண்டும். தமிழரின் அரசியலில் ஏற்பட வேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழரின் அரசியலில் எவ்வித மாற்றமுமின்றி தொடர்கிறது. இது தமிழ் மக்களின் நீண்ட கால பிரச்சினையான அரசியல் பிரச்சினையிலும் தீர்வின்றி செல்வதற்கும் வழிவகுத்துள்ளது.

அரசு தற்போது தேசிய ஆலோசனை சபை ஒன்றை உருவாக்கியுள்ளது. இந்தச் சபையானது தற்போது நாட்டில் அமைச்சரவையை விட அதிகாரம்மிக்கது. அந்தச் சபையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே இருக்கின்றார்.

நாட்டில் காணப்படுகின்ற பிரதான. முக்கிய பிரச்சினைகள் குறித்து இந்தச் சபையே ஆராய்ந்து தீர்வு காண்பதற்கான வழியை ஏற்படுத்தி வருகிறது. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தச்சபையை உரிய முறையில் பயன்படுத்துவதாக தெரிய வில்லை. தேசிய ஆலோசனை சபையின் கடந்த இரண்டு கூட்டத்திற்கும் சம்பந்தன் செல்லவில்லை. இதனால் அன்றைய தினம் ஆராயப்பட இருந்த தமிழ் மக்களின் விடயம் ஆராயப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

எனவே தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காக கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை இவ்வாறே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புறந்தள்ளி வந்துள்ளது. பிச்சைக்காரன் தனக்கு புண் இருப்பதை விரும்புவது போன்றுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடக் கூடாது என்பதில் அக்கறையுடன் இருந்து வருகின்றது. எனவேதான் நாம் வலியுறுத்துகின்றோம் தமிழ் மக்களின் அரசியல் சிந்தனைகளில் மாற்றம் வேண்டும் என்பதை. தமிழ் மக்கள் புதிய அரசியல் கலாசாரத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என்பதை. அதன் மூலமே தமிழ் மக்கள் தங்களுக்கான ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன். கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி உள்ளிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள். பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)




## காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதி குடிமனையினுள் இரவுவேளைகளில் நுழையும் யானைகள் பயன்தரு மரங்களை அழித்து வருவதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 15 வருடங்களாக யானைகள் குடிமனைக்குள் புகுவதில்லை. தற்போது யுத்தத்திற்கு பின்னரான மீள்குடியமர்விற்கு பின்னர் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் நாம் இரவுப் பொழுதை அச்சத்துடன் கழிக்கின்றோம்.

இந் நிலையில் வன்னி யுத்தத்தை அடுத்து அனைத்தையும் இழந்து தற்போது மீளக்குடியமர்ந்த நிலையில் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக காணிகளில் தென்னங்கன்றுகள், வாழை மரங்கள், வீட்டுத் தோட்டம் என்பனவற்றை மேற்கொண்டோம்.

அண்மை நாட்களாக குடிமனையினுள் நுழையும் காட்டு யானைகள் 15 இற்கு மேற்பட்ட தென்னங்கன்றுகள், வாழை மரங்கள் ஆகியவற்றை அடியோடு சாய்த்துள்ளன.

அத்துடன் வீட்டுத் தோட்டத்தை அழித்து நாசப்படுத்தியுள்ளன. அது மட்டுமல்லாது ஒரு வீட்டில் சேமித்து வைக்கப்பட்டிருந்த நெல்லை சேதப்படுத்தியதுடன் கொட்டகையின் கூரையையும் பிடுங்கி எறிந்துள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யானைக் கூட்டத்தை விரட்ட உதவ வேண்டுமென பாதிக்கப்பட்ட குடும்பங்கள் கோரிக்கை விடுக்கின்றன. (அ-2-250)

## பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு செயலமர்வு

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடப்பாண்டில் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) ஆகிய பிரிவுகளில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் சித்தி வீதத்தை அதிகரிக்கும் பொருட்டு, பாட ரீதியான செயலமர்வு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு துணுக்காய் வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நடப்பாண்டில் க.பொ.த (சா/த) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கும் க.பொ.த (உ/த) பிரிவில் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் இச்செயலமர்வு நடைபெறவுள்ளது.

துறைசார்ந்த அனுபவமிக்க வளவாளர்களினால் [illegible] பாடசாலை அதிபர்கள் மாணவர்களை பொறுப்பாசிரியர் [illegible] முன்னதாக அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய எல்லாச் செயல்களுக்கும் தானே பொறுப்பாளி என்று ஏற்றுக் கொள்பவனே தனது எதிர்காலத்தையும் சரியாக நிர்ணயித்து அந்த இலக்கை அடைவான். - எமர்சன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மீள்குடியேற்ற அமைச்சர் கடுமையாகப் பாடுபடவேண்டும்

தமிழர்களின் தாயகத்தில் படைத்தரப்பால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்கவேண்டும் என்ற கோரிக்கை பல வருடங்களாக ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

எனினும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இந்தக் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படவில்லை. இதனால் தமிழ் மக்கள், யுத்தம் முடிந்தும் தங்கள் வாழ்விடங்களுக்குச் செல்ல முடியாமல் போயிற்று.

இந்நிலையில் மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது மீள்குடியமர்வு என்ற விடயம் வலுக்கத் தொடங்கியது. மைத்திரியின் ஆட்சியில் தமிழ் மக்களின் வாழ்விடங்களை விடுவிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

இணக்கம் காணப்பட்ட இந்த விடயத்தை செய்விக்கின்ற முக்கியமான பொறுப்பு தமிழ் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

எனவே மீள்குடியேற்றம் என்ற முக்கியமான பணியை அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்கள் மிக விரைவாகச் செய்து முடிக்க வேண்டும்.

படைத்தரப்பின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள இடங்களில் மீள்குடியேற்றம் செய்வது தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதன் எடுக்கின்ற விரைவான நடவடிக்கைகள் தமிழ் மக்கள் இழந்த தங்கள் வாழ்விடங்களை மீளப்பெறுவதற்கு வழி சமைக்கும்.

அதேநேரம் மீள்குடியேற்ற அமைச்சர், மீள்குடியமர்வு சார் விடயங்களில் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் அடையும் போது அதற்கான காரணங்களை பகிரங்கப்படுத்துவதும் அவரின் கடமையாகும்.

ஏனெனில் மீள்குடியேற்ற அமைச்சுப் பொறுப்பை தமிழ் அமைச்சரிடம் வழங்கி விட்டு வேறு வழிகளில் மீள்குடியேற்றத்திற்குத் தடைசெய்யமுடியும். இவ்வாறு தடை செய்யும் அதேநேரம், மீள்குடியேற்ற அமைச்சை தமிழர் ஒருவரிடம் ஒப்படைத்துள்ளோம். எனவே அவர் தமிழ்மக்களின் மீள்குடியமர்வில் கவனம் செலுத்துவார் என அரசு கூறிக் கொள்ளும்.

இவ்வாறாக தமிழ் மக்களை மீள்குடியமர்த்துகின்ற பொறுப்பை தமிழ் அமைச்சரிடம் கொடுத்திருப்பதன் மூலம் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தில் இருந்து இலங்கை அரசு தப்பித்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

ஆகையால் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அவர்கள், படைத்தரப்பால் விடுவிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலங்களில், உரியவர்களை மீளக்குடியமர்த்தும் பணியை துரிதப்படுத்த வேண்டும். இந்தப் பணியை விரைவுபடுத்துவதற்கு வசதியாக, அமைச்சர் சுவாமிநாதன் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் அலுவலகத்தை திறந்து மீள்குடியமரும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

இப்பணியைச் செய்வதற்காக அமைச்சர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து களத்தில் இறங்கி, மீள்குடியேற்றப் பணியைக் கவனிக்கவேண்டும்.

இதைச் செய்வதில் காலதாமதம் ஏற்படுமாயின் அரசு தப்பித்துக் கொள்ளும். ஆனால் தமிழன் தமிழனுக்கு உதவமுன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்து நிற்கும் என்பதால், தமிழனுக்குக் கிடைத்த மீள்குடியேற்ற அமைச்சுப் பதவி; தமிழனுக்குப் பேருதவி புரிந்தது என்பதாக நிலைமையை மாற்ற அமைச்சர் சுவாமிநாதன் முன்வரவேண்டும்.

# நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தில் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

## வடக்குடன் ஒத்துழைக்குமாறு மாவை ஜனாதிபதியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் தமிழர்களிற்கும் மாற்றத்தினை வழங்க வேண்டும் என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசும் கடந்த கால அரசினை போல் வடமாகாண சபையோடு முரண்படாமல் வடக்கின் அபிவிருத்திக்கும் ஒத்துழைக்க வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்ற வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்

மக்களுடைய நிலங்களை விடுத்து கடல் பகுதி மற்றும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்து பலாலியில் விமான நிலையம் மற்றும் துறைமுகம் என்பன வற்றை அபிவிருத்தி செய்ய புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது பிரதேசம் நீண்ட கால போரினால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அனைத்தையும் இழந்தவர்களாக உள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டிய பல தேவைகள் உள்ளன. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு அமைச்சரவையில் விசேட நிதி ஒதுக்கீடுகளை வடபகுதிக்கு ஏற்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் போரினால் விதவைகளாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானவர்கள் இங்கு உள்ளனர். அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கு பட்டங்களைப் பெற்று பல ஆண்டுகளாகியும் வேலை வாய்ப்பு இன்றி இளைஞர் யுவதிகள் உள்ளனர். எனவே அவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தமிழர்களது நிலப்பரப்புக்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. எனவே அவற்றை விரைவில் விடுவித்து மக்களை மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பலாலியில் விமான நிலையத்தினை அமைத்து ஏனைய நாடுகளுக்கு போக்குவரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போல துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்ய வேண்டும் .

இந்த அபிவிருத்திகள் அனைத்தும் மக்களது நிலங்களை விடுத்து கடற்பகுதிக்குள் துறைமுக அபிவிருத்திகளை கொண்டு செல்ல புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநாடுகளுடன் பேசி பணத்தைப் பெற்று வடக்கு மாகாணத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ள அரசு ஆதரவு வழங்க வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதன் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முதற்தடவையாக விஜயம் மேற்கொண்டுள்ளமையை தமிழ் மக்கள் சார்பாக வரவேற்கின்றோம். இன்று நல்லதொரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த மாற்றம் தீர்வு நோக்கி பயணிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக பல வழிகளிலும் பல்வேறு நடவடிக்கைகள் பல தரப்பினர்களாலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வந்தன. குறிப்பாக தமிழின அடையாளங்களை அழித்து தமிழ் மக்களையே இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் அதனை தடுத்து நிறுத்துமென்று நம்புகின்றோம்.

மேலும் இங்கு ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவித்தல், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், அடிப்படைப் பிரச்சனைகளுக்கு தீர்வை ஏற்படுத்தல், அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை மாவை சேனாதிராசா முன்வைத்தார். (செ-4)

## இடமாற்ற உறுதி; போராட்டம் இரத்து

(மல்லாவி)

முல்லைத்தீவு. மன்னார். கிளிநொச்சி. வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள கல்வி வலயங்களில் கடமையாற்றி தமது சேவைகாலத்தை நிறைவு செய்து மாவட்ட ரீதியாக இடமாற்றத்திற்கு விண்ணபித்து இதுவரை இடமாற்றம் வழங்கப்படாத ஆசிரியர்களினால் இன்று புதன்கிழமை வட மாகாண கல்வி அமைச்சின் முன் நடத்தவிருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களினால் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஆர்.ராஜேந்திரன் ஆகியோருடன் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருந்தனர்.

இக்கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்வை அடுத்தே போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

எட்டப்பட்ட தீர்வின் படி எதிர்வரும் 9-ம் திகதி திங்கட்கிழமை கல்வி அமைச்சின் செயலாளரினால் இடமாற்றத்திற்கு தகுதியான அனைத்து ஆசிரியர்களுக்கும் ஏப்ரல் மாதம் 1-ம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்படியான இடமாற்றக் கடிதம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 1-ம் திகதிக்கு முன்னதாக இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் தாம் கடமையாற்றும் கல்வி வலயங்களில் இருந்து குறித்த ஆசிரியரை பதில் ஆசிரியர் இன்றி விடுவிக்க முடியும் என கடிதம் பெறவேண்டும்.

அவ்வாறு பெறும் பட்சத்தில் குறித்த ஆசிரியர் இடமாற்றம் பெற்றுக் செல்ல முடியும். அவ்வாறு கடிதம் கிடைக்கப் பெறாத ஆசிரியர்கள் அனைவருக்கும் பதில் ஆசிரியர்கள் குறித்த கல்வி வலயத்தினூடாக வழங்கப்பட்டு ஏப்ரல் 1-ம் திகதிக்கு முன்னர் விடுவிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-15)

## வீதி மூடப்படும்

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் மாபெரும் துடுப்பாட்ட போட்டி யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இதனால் இராஜேந்திர பிரசாத் வீதி மற்றும் சப்பல் வீதியின் (chapel street) ஒருபகுதி குறிப்பிட்ட தினங்களில் மூடப்பட்டிருக்கும் என்பதனையும் பொதுமக்கள் மாற்றுப் பாதையினை பயன்படுத்து [illegible] (செ-13)

## வன்னிப் பிரதேச ஆசிரியர்களுக்கு ஏப்.01 லிருந்து யாழிற்கு இடமாற்றம்

வன்னிப்பிரதேசத்தில் கடமையாற்றி இடமாற்றத்துக்கு விண்ணப்பித்த. தகுதியுடைய அனைவருக்கும் ஏப்ரல் முதல் திகதி அமுலுக்கு வரும் வகையில் எதிர்வரும் மார்ச் 09 ஆம் திகதி திங்கட்கிழமை இடமாற்றக் கடிதங்கள் மாகாண கல்வியமைச்சின் செயலாளரிடமிருந்து ஒவ்வொரு கல்வி வலயத்தின் பிரதிநிதிகளிடம் நேரடியாகக் கையளிக்கப்படும் என வடமாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் தெரிவித்தார்.

நேற்று 03-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 05 மணியளவில் செம்மணிவீதியிலமைந்துள்ள வட மாகாண கல்வியமைச்சில் இடமாற்றத்துக்குத் தகுதியுடைய ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் இறுதியிலேயே மேற்குறிப்பிட்ட முடிவெடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவர்களின் வெற்றிடங்களை புதிதாக நியமிக்கப்பட இருக்கும் பட்டதாரி ஆசிரியர்களை வைத்து ஏப்ரல் முதல் வாரத்துக்குள் நிரப்ப முடியும் என இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வடமாகாணகல்வியமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ராஜேந்திரன் மற்றும் இடமாற்றத்துக்குத் தகுதியுடைய ஆசிரியர்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (செ-11)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நம்பிக்கையுடன் இரு



✦ கடவுளைச் சரணடைந்தவனுக்கு வாழ்வில் தளர்ச்சியே உண்டாவதில்லை.

✦ மனிதனின் நம்பிக்கை தீவிரமாகி விட்டால் அவன் விருப்பம் விரைவில் நிறைவேறி விடும்.

✦ பணத்தால் மனிதனின் குணம் மாறி விடும். அதனால், அதில் அதிக நாட்டம் வைப்பது நல்லதல்ல.

✦ உடலால் துன்பம் நேர்ந்தாலும். உண்மையான பக்தனின் மனதை துன்பம் நெருங்க முடியாது.

✦ கடவுளைப் பற்றிய உண்மையை உணர்ந்தவன் எப்போதும் மகிழ்ச்சியில் திளைப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பீட்டர்சன் சிறப்பாக விளையாடினால் இங்கிலாந்து அணியில் இடம்பிடிக்கலாம்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி நட்சத்திர வீரராக திகழ்ந்தவர் கெவின் பீட்டர்சன். இவர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் புறக்கணிக்கப்பட்டு வருகிறார். தற்போது நடைபெற்று வரும் உலகக்கோப்பை போட்டிக்கு தன்னை தேர்வு செய்வார்கள் என்று பெரிதும் எதிர்பார்த்தார். ஆனால், அவரை அணியில் சேர்க்க வில்லை.

இந்நிலையில், கெவின் பீட்டர்சன் கவுன்ட்டி போட்டியில் சிறப்பாக விளையாடினால் இங்கிலாந்து அணியின் இடம்பிடிக்கலாம் என்று இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரிய சேர்மன் கொலின கிரேவ்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'இங்கிலாந்து அணியில் இடம்பிடிக்க முதல் படியாக, அவர் கவுன்ட்டி போட்டியில் கட்டாயம் விளையாட வேண்டும். கவுன்ட்டியில் அதிக அளவு ஓட்டங்கள் குவித்தால் தேர்வாளர்கள் அவரை புறக்கணிக்க



முடியாது' என்றார்.

இதுகுறித்து இங்கிலாந்து அணியின் செய்தி தொடர்பாளர் கூறும் போது கிரேவ்ஸ் கூறியது சரியானது. அதில் எந்த மாற்றமும் இல்லை. வீரர்கள் உயர்நிலை கவுன்ட்டி போட்டியில் சீராக விளையாடினார்கள் என்றால், அவர்கள் இங்கிலாந்து அணியில் இடம்பெறும் வாய்ப்பு உள்ளது என்றார்.

பீட்டர்சனும், நிச்சயம் இங்கிலாந்து அணியில் இடம்பெற கவுன்ட்டி போட்டியில் விளையாடுவேன்" என்று கூறியுள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்கான கவுன்டி போட்டி ஏப்ரல் 12 ஆம் திகதி தொடங்க இருக்கிறது. அதே நேரத்தில் ஐ.பி.எல். போட்டியிலும் பீட்டர்சன் விளையாட உள்ளார். ஐ.பி.எல். போட்டி ஏப்ரல் 8ஆம் திகதி முதல் மே 24 ஆம் திகதி வரை நடக்கிறது.

மேலும், கரீபியன் பிரிமியர் லீக் போட்டியிலும் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இது ஜூன் மாதம் முதல் ஜூலை மாதம் வரை நடைபெற இருக்கிறது.

ஆகையால் கவுன்ட்டி போட்டியில் சிறப்பாக விளையாடி இங்கிலாந்து அணியில் இடம் பிடிப்பாரா? அல்லது ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவாரா? என்பது பீட்டர்சன் கையில்தான் உள்ளது. (க)






சர்வதேச ரீதியில் I.S.K.A கராத்தே கழகத்தினால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் கராத்தே சுற்றுப்போட்டி இடம்பெற்றது. இதில் கறுப்புபட்டி ஆசிரியர்களிற்கான போட்டியில் சென்சே விஜயராஜ் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார். அவருடன் வெற்றியீட்டியவர்களையும் நடுவர்களையும் படத்தில் காணலாம்.

# கோலியை பின்னுக்குத் தள்ளி சாதனை படைத்த அம்லா'

கான்பெராவில் நேற்று நடைபெற்ற உலக கோப்பை போட்டியில் அயர்லாந்துக்கு எதிரான தென் ஆபிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர் அம்லா சதம் அடித்தார்.

இப்போட்டியில் சதம் அடித்ததன் மூலம் 108 போட்டிகளிலேயே 20 சதங்களை அடித்தவர் என்ற சாதனையை அம்லா படைத்தார். இதற்கு முன் 133 போட்டிகளில் 20 சதங்களை விளாசியிருந்தார் இந்திய வீரர் விராட் கோலி.நேற்றைய சதத்தின் மூலம் கோலியின் சாதனையை அம்லா முறியடித்துள்ளார். மேலும் நேற்றைய போட்டியில் 159 ஓட்டங்களை குவித்ததன் மூலம், ஒரு நாள் போட்டியில் தனது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையையும் அம்லா பதிவு செய்தார். தென்னாபிரிக்க அணியில் 2 ஆவது [illegible]க்கெட் பார்ட்னர்ஷிப்புக்கு அதிக ஓட்டங்களை குவித்து அம்லா-டு பிளிஸ்சிஸ் ஜோடி(247 ஓட்டங்கள்) சாதனை படைத்தது. கடந்த போட்டியில் 400 ஓட்டங்களை குவித்த தென்னாபிரிக்கா, இப்போட்டியிலும் மீண்டும் 400 ஓட்டங்களுக்கு மேல் குவித்தது குறிப்பிடத்தக்கது. (க)

# லா லிகா காற்பந்து; ரொனால்டோ கோல்



பிரபலமான காற்பந்து கிளப் அணிகளான பார்சிலோனா, ரியல் மாடரிட் உட்பட பல அணிகள் பங்குபெறும் லா லிகா காற்பந்து லீக் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு போட்டியில் ஸ்பெயின் நாட்டின் முன்னணி கிளப் அணிகளான ரியல் மாட்ரிட் - வில்லர்ரியல் அணிகள் மோதின.

ஆட்டம் முதலே இரு அணிகளும் சிறப்பாக விளை யாடின. இதனால் ஆட்டம் பரபரப்பாக காணப்பட்டது. முதல் பாதி நேரத்தில் இரு அணிகளும் கோல் போடவில்லை.

இரண்டாவது பாதி நேரத்தில் 52 ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணியின் முன்னணி வீரர் கிறிஸ் டியானோ ரொனால்டோ கோல் அடிக்க முயன்றார். அவரை பெய்லி தடுத்து தவறு செய்ததால் பெனால்டி கொடுக்கப்பட்டது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி ரொனால்டோ கோல் அடித்தார். ஆனால், 65 ஆவது நிமிடத்தில் வில்லர்ரியல் அணியின் மொரேனோ அருமையாக பதில் கோல் அடித் தார். அதன்பிறகு இரு அணி வீரர்க ளாலும் கோல் அடிக்க முடிய வில்லை.

இதனால் இந்த ஆட்டம் 1-1 என சமநிலையில் முடிந்தது.

மற்றொரு ஆட்டத்தில் பார்சிலோனா- கிரனாடா அணிகள் மோதின. இதில் பார்சிலோனா 3-1 என்ற கணக்கில் வென்றது. மெஸ்சி, சுராஸ், ராகிடிக் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். இந்த வெற்றியின் மூலம் ரியல்மாட்ரிட் அணியின் புள்ளியை நெருங்கி வந்துள்ளது.

நேற்றைய ஆட்ட முடிவுகளுக்குப் பிறகு ரியல் மாட்ரிட் 61 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், பார்சிலோனா 59 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளது. (க)



# மகாத்மா, நவஜீவன்ஸ் வெற்றி

நெடியகாடு இளைஞர் விளை யாட்டு கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் (Jaffna Challengers Cup) உதைபந்தாட்ட சுற்று தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென் அன்ரனீஸ் விளை யாட்டு கழகத்தை எதிர்த்து விளை யாடிய சாவற்காடு மகாத்மா விளை யாட்டு கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றுது.

நடைபெற்ற மற்றுமொரு ஆட்ட த்தில் சென்.லூட்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டு கழகம் மோதியது. இரு அணிகளும் எந்தவொரு கோலி னையும் போடவில்லை. பின்னர் தண்ட உதை மூலம் 3:2 என்ற கோல் அடிப்படையில் உடுப்பிட்டி நவஜீவ ன்ஸ் அணி வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு தகுதி பெற்றது. (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யங்கம்பன்ஸ் றோயல் வெற்றி

நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில நடத்தும் jaffna challengers cup உதைபந்தாட்ட சுற்று தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிரத்து விளையாடிய கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு கழகம 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெறறது. யங்கம்பன்ஸ் அணிசார்பாக பிரியதர்சன் 3 கோல்களையும், பிரகாஸ் ஒருகோலினையும பெற்றுக் கொண்டனர்.

நடைபெற்ற மற்றைய ஆட்டத்தில வல்வெட்டி கருணாகரன விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோலகணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது. (க)


## வெளிநாட்டு கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

வெளிநாட்டுப் பல்கலைக்கழக அனுமதிகள், சிறந்த ஆலோசனைகள், வழிகாட்டல்கள்
அனுமதிகள் முற்றிலும் இலவசம்

(C-251)

காலம் : 05.03.2015 காலை 10.00 மணி
கொழும்பில் இருந்து வருகைதரும் நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் செயலமர்வு இடம்பெறும்.

**E-CITY COLLEGE OF ENGLISH**
இல-372D, முதலாவது மாடி, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106 / 0773400418 / 0774924166 / 0770610271


## பருத்தித்துறை நகராட்சி மன்றம்
# வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் கோரப்படுகின்றது.

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 04.03.2015ஆம் திகதி தொடக்கம் 17.03.2015ஆம் திகதி பி.ப 3.00 மணிவரை
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: 19.03.2015ஆம் திகதி 12.00 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 19.03.2015 பி.ப 2.00 மணி
04. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்குமுன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்
05. கேள்வி பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை "நகரபிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புவதுடன் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்
06. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு

மேலதிக விபரங்களை பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(C-259)

| இல | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி | மீளளிக்கப் படாத NBT வரி | ஆகக்குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | நெல்லண்டை அம்மன் கிழக்கு ஒழுங்கை கொங்கிறீற் றோட் அமைத்தல் | 7750.00 | 750.00 | 82.50 | 15.00 | C9 |

நகராட்சி மன்ற அலுவலகம்
பருத்தித்துறை 03.03.2015

தேசமானிய திரு.சபா.ரவீந்திரன் JPUM
நகரபிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை.


## மலேசியா வேலைவாய்ப்பு

**Printing Company** - 10 பேர்
1600 RM + OT - 65000 SR
(No Food, Accomodation Free)

**Production Operater**
1000 RM + OT - 8500 SR
(No Food, Accomodation Free)

## டுபாய் வேலைவாய்ப்பு

**Steel Factory** - 09 பேர்
900 dhs + OT, 65000 SR
(No Food, Accomodation Free)

## சவுதி வேலைவாய்ப்பு

**Cement Factory**
1200 RL + OT 45000 SR
(Food Free, Accomodation Free)

(C-264)

தொடர்புகளுக்கு: 0767729332, 0767728640
Thinesh Jeyakumar 2012@gmail.com

**Ashok Machineries**

**CEMENT BLOCK MAKING MACHINES**




Contact: Niroshana 0718542884

**Ashok Machineries**
011 5 656505, 0114-555770, 0114807586

## தொழில் வாய்ப்புக்கள்

உடனடி தொழில்வாய்ப்புக்கள் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற பிரதேசங்களில் உள்ள 18-50 வயது ஆண் /பெண் இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பகுதிகளில் குறைந்த விலையில் உணவு, தங்குமிட வசதிகளுடன் ஜாம், ரொபி, பிஸ்கட், கோடியல், ஐஸ்கிறீம், நூடில்ஸ், சோயாமீற், பப்படம், ரயர், அலுமினியம் இன்னும் பல உற்பத்தி நிறுவனங்களில் உற்பத்தி லேபல், பொதியிடல், Delivery போன்ற பல பிரிவுகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.

சம்பளம் **39,000/=**
(தொழில் அடிப்படையில்)

நண்பர்கள், குழுக்கள், தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில் மற்றும் கல்வி கற்ற/அற்ற அனைவரும் தமிழில் தொடர்பு கொள்ளலாம்.

(C-261)

தொடர்புகளுக்கு
**0771116770, 0776838231**




# மரண அறிவித்தல்

திருமதி
## கதிரவேலு தங்கம்மா
("பூம்புகார்" அல்வாய் வடக்கு அல்வாய்)

பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சி பருத்தித்துறை கிளையின் பொருளாளரும் ஆகிய பூம்புகார் கதிரவேலு தவயோகநாதனின் அன்புத் தாயார் கதிரவேலு தங்கம்மா நேற்று (03.03.2015) காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.03.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் (பூம்புகார் அல்வாய் வடக்கு அல்வாய்) இடம்பெற்று தகனக்கிரியைக்காக பி.ப 2 மணியளவில் பூதவுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

(C-269)

தகவல்:
இலங்கை தமிழரசுக் கட்சி, பருத்தித்துறைக் கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்லா, டு பிளசிஸ் அதிரடி சதம்
# தென்னாபிரிக்கா பிரமாண்ட வெற்றி




அயர்லாந்துக்கு எதிரான உலகக் கிண்ண லீக் போட்டியில் தென்னாபிரிக்க அணி 201 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மண்ணில் 11ஆவது உலகக் கிண்ண தொடர் நடக்கிறது.

இதில் கான்பெராவில் நேற்று நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில், தென்னாபிரிக்கா- அயர்லாந்து அணிகள் மோதின.

நாணயசுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் டி வில்லியர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

அதன்படி தென்னாபிரிக்க அணிக்கு தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய குயின்ரன் (1) ஏமாற்றினார்.

பின்னர் ஜோடி சேர்ந்த அம்லா, டு பிளசிஸ் இருவரும் நிதானமாக விளையாட ஆரம்பித்தனர்.

அயர்லாந்து பந்து வீச்சை நாலாபுறமும் சிதறடித்த இருவரும் சதம் அடித்தனர்.

அணியின் ஓட்டங்கள் 259 ஆக இருந்த போது டு பிளசிஸ் ஆட்டமிழந்தார். இவர் 109 பந்துகளில் 109 ஓட்டங்கள் (10 பவுண்டரி, ஒரு சிக்சர்) குவித்தார்.

இந்த ஜோடி 2ஆவது விக்கெட்டுக்கு 247 ஓட்டங்கள் குவித்தது. மறுமுனையில் அதிரடி காட்டிய அம்லா 159 ஓட்டங்கள் (16 பவுண்டரி, 4 சிக்ஸர்) எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் டி வில்லியர்ஸ் வழக்கம் போல் அதிரடி காட்டினார். 2 சிக்ஸர், ஒரு பவுண்டரி விளாசிய நிலையில், 9 பந்துகளில் 24 ஓட்டங்கள் குவித்து வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து வந்த மில்லர் மற்றும் ரொஸ்ஸோவ் ஆகியோரும் தங்கள் பங்குக்கு அதிரடி காட்டினர். மில்லர் 23 பந்தில் 46 ஓட்டங்களுடனும் (4 பவுண்டரி, 2 சிக்சர்), ரொஸ்ஸோவ் 30 பந்தில் 61 ஓட்டங்களுடனும் (6 பவுண்டரி, 3 சிக்சர்) களத்தில் இருந்தனர்.

தென்னாபிரிக்கா வீரர்களின் இவ்வாறான அதிரடியான ஆட்டத்தினால் அவ்வணி 50 ஓவர் நிறைவில் 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 411 ஓட்டங்களை குவித்தது.

அயர்லாந்து தரப்பில், மெக்பிரைன் 2 விக்கெட்டுகளையும், கெவின் ஓபிரைன், மூனி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து 412 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங் கிய அயர்லாந்து 45 ஓவர்களிலே சகல விக்கெட்டுகளையும் இழந்து 210 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதனையடுத்து தென்னாபிரிக்க அணி 201 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமான வெற்றியை பெற்றது.

அயர்லாந்து அணியால் தென்னாபிரிக்க பந்து வீச்சை சமாளிக்க முடியவில்லை.

அந்த அணியில் அணித் தலைவர் போர்டர்பீல்ட் (12), நியால் ஓபிரைன்(14), பால்பிரைனி (58), கெவின் ஓ பிரைன் (48), டோக்ரெல் (25), சோரன்சென் (22) மட்டுமே ஓரளவுக்கு ஓட்டங்களை குவித்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில், அபோட் 4 விக்கெட்டுகளையும், மோர்கல் 3 விக்கெட்டுகளையும், ஸ்ரெய்ன் 2 விக்கெட்டுகளையும், டி வில்லியர்ஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சதம் விளாசிய தென்னாபிரிக்க வீரர் அம்லா தெரிவு செய்யப்பட்டார். (க)




## ஜேர்மன்...

மேலும் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் கட்சி பிரதி நிதிகள், அரசாங்கத் தரப்பினர், எதிர்க் கட்சியினர், மத தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்பு பிரதி நிதிகளை இவர் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அத்துடன் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கும் அவர் பயணம் மேற்கொள்வார் என்றும் தூதரகம் மேலும் அறிவித்துள்ளது. (செ-11)


## அறிவித்தல்

வண் மேற்கு வைத்தியசாலையில் (கங்காதரன் வைத்திய சாலை) இன்று 04.03.2015 வெளி நோயாளர் பிரிவு, வைத்திய நிபுணர் சேவைகள் நடைபெறாது என்பதை அறியத் தருவதுடன் மறுதினம் 05.03.2015 தொடக்கம் வழமை போல சகல சேவைகளும் நடைபெறும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

வண்மேற்கு வைத்தியசாலை
(கங்காதரன் வைத்தியசாலை)
நிர்வாகி

(9664)

## வெளிவந்து விற்பனையாகிறது

- வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் வருமான வரிப் பரிசோதகர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்கள்.
- தரம் – 06 English Medium கணிதம் (C-266)

மேலும் பல வகையான நூல்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : யாழ் புத்தகசாலை 305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்) 021 4545552 / 077 8349 507

பத்திரிகைகளும் விண்ணப்பப் படிவங்களும் பெற்றுக்கொள்ளலாம் ஞாயிற்றுக்கிழமைகளிலும் 6.00 வரை திறந்திருக்கும்.

A/L 2016
## வணிகக் கல்வி

Theory 2 மணித்தியாலம்
Rivision 2 மணித்தியாலம்
Paper 2 மணித்தியாலம்

6 மணித்தியால வகுப்பு

ஆரம்பம் :- 09.03.2015 திங்கள் 4.00 p.m

அலகு ரீதியான மீட்டல், அலகு ரீதியாக 100 ற்கு மேற்பட்ட MCQ வினாக்கள், கடந்த கால பரீட்சை வினா விடைகள்

சிறந்த பெறுபேற்றை பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில் மாதிரிப் பரீட்சைகள்

V.MURALEE
B.B.A (Fm Spl)

DCM ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்


## மரண அறிவித்தல்

### அமரர் மயில்வாகனம் சுப்பிரமணியம்



துரை வீதி, இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், 183, ஸ்கந்தபுரம் கிளிநொச்சி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுப்பிரமணியம் 01.03.2015 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் சின்னத்தங்கச்சியின் மகனும், கந்தையா கண்மணியின் மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், குலசிங்கம், இலங்கநாதன், காந்தராஜா (வவுனியா), மகேஸ்வரி(கண்டி), இரத்தினமூர்த்தி (ஜெயகணன் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருட்செல்வம் (தம்பி), அருட்செல்வம் (தயா, இத்தாலி), நந்தினி (கனடா), ஜெயந்தா, சுதா, வவி (பிரான்ஸ்), கெங்கா (கனடா) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் இந்திராதேவி, வதனா (இத்தாலி), நவதீபன் (தீபன், கனடா), ரஜிதரன் (கரன் பான்ஸி, சுன்னாகம்), கருணராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாணுகா (கனடா). ஆரண்யன், அனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.03.2015) புதன் கிழமை இணுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரைவீதி,
இணுவில் தெற்கு,
தாவடி

தகவல்:-
குடும்பத்தினர்.
TP: 0779275886

(9653)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.